₹10

fmpb

அறைகூவல்

Volume 54 Issue 2 February 2024



மீட்கும் கர்த்தர்

"தேவ நோக்கத்தை மறுப்பதற்கு நான் எம்மாத்திரம்?"

விடுவிக்கும் கர்த்தர்



அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் காங்கிரஸ் மாநாட்டுக்குச் செல்லும் வழியில் பன்றி ஒன்று சேற்றில் தத்தளிப்பதைக் கண்டு வாகனத்தை நிறுத்தச் சொல்லி ஓட்டுநரிடம் அப்பன்றியை காப்பாற்ற கூறினார். ஆனால் அந்த ஓட்டுநரின் முயற்சி தோல்வியடையவே, தான் அணிந்திந்த விலையுயர்ந்த ஆடையையும் பொருட்படுத்தாமல் அவரே அந்த சாக்கடையில் இறங்கி அப்பன்றியை காப்பாற்றினார். நாம் வணங்கும் ஜீவனுள்ள தேவன் கரிசனை மிக்கவர். அவர் பார்க்கிறவர்– நம் செயல்களை, பாடுகளை, அவர் உணருபவர்–நம் உள்ளார்ந்த உணர்வுகளை, அவர் கேட்கிறவர் – நாம் வார்த்தையால் சொல்ல முடியாத நம் ஏக்கங்களை, அவர் பேசுபவர்–நம்மை ஆறுதல்படுத்த, கண்டிக்க, வழிநடத்த, அவரால் முடியும். ஆகையால்தான் இஸ்ரவேல் மக்கள் அடிமைத்தனத்தில் இருக்கும்போது "எகிப்தில் இருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன். அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்" (யாத்.3:7) என்று கூறுகிறார். இதைக் கூறிவிட்டு அமைதலாக இருந்துவிடாமல் செயலில் இறங்கவே அதாவது இஸ்ரவேலரை மீட்கும் பொருட்டு மோசேயைத் தெரிந்தெடுத்து அவரின் பாரத்தையும் அவரின் மீட்பின் திட்டத்தையும் கூறியபோது மோசே தன்னுடைய இயலாமை மற்றும் திறனற்ற நிலையை உணர்ந்து (யாத். 3:11) 'பார்வோன் இடத்திற்குப் போகவும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும் நான் எம்மாத்திரம்' என்றான். இவ்வசனத்தில் மோசே தேவ நோக்கத்தினை நிறைவேற்றக் கூடாமல் மறுப்பதை பார்க்கிறோம். எனவேதான் தேவன் மோசே போன்ற தலைவர்களை கடினமான சூழ்நிலைகள் மத்தியிலும் பல விதங்களில் பயிற்றுவித்து தகுதிப்படுத்தி தான் வைத்திருக்கும் நோக்கத்திற்கு நேராய் அவர்களைப் பயன்படுத்தி வருகிறார். இஸ்ரவேலரை விடுவிக்க தேவன் மோசேயை சிறு பிள்ளையாக இருக்கும்போதே தெரிந்தெடுத்து 40 ஆண்டுகள் பார்வோனின் அரண்மனையிலும் 40 ஆண்டுகள் ஆடுகளுக்குப் பின்னாக வனாந்திரத்திலும் வைத்து பொறுமை, தாழ்மை ஆகியவற்றை கற்றுக்கொடுத்து பயன்படுத்த சித்தம் கொண்டிருந்தார். திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த மோசேயை தேவன் பக்குவப்படுத்தி வாக்குத்தத்தங்களைக் கொடுத்து தனது மீட்பின் திட்டத்தில் பயன்படுத்தினார். மோசே போன்ற தலைவர்களையும் பல ராஜாக்களையும் மற்றும் நியாயதிபதிகளையும் காலத்திற்கேற்றவாறு தனது மீட்பின் திட்டத்தில் பயன்படுத்தி வந்த தேவன் இன்றும் தம் ஜனங்கள் பாவ சேற்றில் அடிமைத்தனத்தில் அழிழ்ந்து கொண்டிருப்பதை காண முடியாமல் தாமே இரட்சகராக வந்து நமக்காக இரட்சிப்பின் திட்டத்தில் அனைத்தையுமே செய்து முடித்தார். அவ்வாறு நிறைவேற்றிய இரட்சிப்பின் வழியை கூறுவதற்கு மீட்பின் பணியில் பயன்படுத்தப்படுவதற்கு ஒரு கூட்ட மக்களை அவர் தேடிக்கொண்டே இருக்கிறார். அதில் பயன்படுத்தப்பட்ட நாம் நம்மை அவர் பாதத்தில் முழுமையாக ஒப்படைப்போம். நாம் இருக்கின்ற இடங்களிலாவது அல்லது ஊழியப் பணித்தளங்களிலாவது அவர் வைத்திருக்கும் திட்டத்தை நிறைவு செய்ய நாம் நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்.

- மெர்சி செல்வின் *(தகவல் தொடர்புத்துறை)*

அற்பகாலம் மூண்ட கோபத்தினால் என் முகத்தை இமைப்பொழுது உனக்கு மறைத்தேன்; ஆனாலும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன் என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்.
– ஏசாயா 54:8

"ஜெபம் என்பது தேவனால் மீட்கப்பட்ட தேவ பிள்ளைகள் தேவனுடன் ஒருங்கிணைந்து பூமியில் தேவன் தன்னுடைய மீட்பின் நோக்கங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான பங்களிப்பு ஆகும்.
– ஜாக் டபிள்யூ. ஹேஃபோர்ட்

அவர்களுடைய மீட்பரோவெனில் வல்லமையுள்ளவர், சேனைகளின் கர்த்தர் என்பது அவருடைய நாமம்; தேசத்தை இளைப்பாறப்பண்ணுவதற்கும், பாபிலோன் குடிகளைத் தத்தளிக்கப்பண்ணுவதற்கும் அவர்களுடைய வழக்கை அவர் நடத்துவார். – எரேமியா 50:34

அறியாதோர்க்கு என் மகிமையான மீட்பரை அறிவிக்க வேண்டும் என்பதே என் இதயத்தின் ஏக்கம்.
– வில்லியம் சால்மர்ஸ் பர்ன்ஸ்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நமது தரிசனம்:

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

நமது ஊழியம்:

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.
இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

feedbackfmpb@fmpb.org
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ
ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

தனிப்பிரதி ரூ.10/-	வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ.48/-	ஆண்டு சந்தா ரூ.480/-
ஆயுள் சந்தா ரூ.500/-	ஆயுள் சந்தா ரூ.5000/-

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை – 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

பொதுச்செயலாளரிடமிருந்து...



சந்திக்கப்படாதோரைச் சந்திக்கும் இயக்கத்தின் பங்காளர்களே!

மாற்கு 10:43-வது வசனத்தை பலமுறை நான் வாசித்திருந்தாலும், சில நாட்களுக்கு முன்பு மீண்டுமாக அந்த பகுதியினை வாசிக்கும் பொழுது பரிசுத்த ஆவியானவர் ஒரு புதிய வெளிச்சத்தில் உணரச் செய்தார். யோவானும் யாக்கோபும் அவர்கள் கேட்பதை எல்லாம் இயேசு கிறிஸ்து செய்ய வேண்டும் என்று அவரை வேண்டுவதாக பின்னணியம் தொடங்குகிறது. கிறிஸ்து அவர்களுக்கு, "உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்" என்று பதிலுரைத்தார். (மாற்கு 10:43) நீங்கள் ஒரு குழுவில் பெரியவனாக இருக்க விரும்பினால், நீங்கள் அவர்களின் பணிவிடைக்காரனாக இருக்க வேண்டும் என்று கிறிஸ்து வலியுறுத்துகிறார். யாருக்கோ அல்லது எங்கேயோ பணிவிடைக்காரராக இருப்பது அல்ல, எந்த குழுவின் தலைவனாக ஒரு நபர் விரும்புகிறாரோ அந்த குழுவில் பணிவிடைக்காரராக அவர் இருப்பதுதான் சாலச் சிறந்தது. நாம் நம்முடைய பெருமை, அகங்காரம், பதவிகள் ஆகியவற்றை கர்த்தரின் பலிபீடத்தில் வைத்துவிட்டு நம்மை முழுமையாக வெறுமைப்படுத்திக் கொள்ளாவிடில், தேவன் அவருடைய சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்ற முடியாது.

தமிழக மண்டல திருச்சபைகள், மிஷனரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுடனான சந்திப்பு:

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன்பாக தமிழக மண்டல பணித்தள மிஷனரிகளையும், சுதேச ஊழியர்களையும் சந்தித்து நான்கு நாட்கள் அவர்களோடு உரையாட தேவன் அனுக்கிரகம் செய்தார். மூன்று திருச்சபைகளில் தேவனுடைய வார்த்தையினை பகிர்ந்து கொண்டேன். இந்த விஜயம் மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தது.

கொடைக்கானல் கூட்டங்கள்:

கிறிஸ்துமஸ்துக்குப் பிறகு, கொடைக் கானலில் ஒரு சுதேச ஊழிய ஸ்தாபனத்தின் ஊழியர்களுக்கு ஊழியத்தினை மேம்படுத்தும் காரியங்கள் பற்றி இரண்டு நாட்கள் போதிக்க தேவன் கிருபை செய்தார். பங்கு பெற்ற மற்ற மிஷனரிகளுடன் எனக்கும் புதிய அனுபவத்தை தருவதாக இந்த போதனை அமர்வுகள் இருந்தன.

பஞ்சாப் விஜயம்:

பஞ்சாப் மாநிலத்தில் பணியாற்றும் நமது மிஷனரிகளை ஜனவரி 4-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை சந்தித்தேன். இந்த நான்கு நாட்களும் பகலிலும் இரவிலும் பயணம் அதி காலையில் தங்குமிடத்தினை சென்றடைவது என்று பரபரப்பாகவே இருந்தன. கடும் குளிராகவும் மூடுபனியாகவும் இருந்ததினால் வாகனத்தை ஓட்டுவது மிகவும் சிரமமாக இருந்தது. ஆனாலும் கர்த்தரின் காக்கும் கரமும் அவர் பிரசன்னமும் கூட இருந்ததால் பயணமும் ஊழியமும் இனிமையாக அமைந்தது.

கலாச்சாரம் கடந்து சுவிசேஷம் அறிவிக்கும் பயிற்சி:

ஃபரித்கோட் பயிற்சி மையத்தில் வைத்து பஞ்சாப், ஜம்மு மற்றும் ஹிமாசலப் பிரதேச மிஷனரிகளுக்கு மூத்த மிஷனரிகள் துணையுடன் வேற்று கலாச்சார தொடர்புகள் பற்றி பயிற்சி அளித்தோம். மொழியியல்

உதவியாளர்கள் மூலமாக மிஷனரிகள் சேகரித்த தரவுகள் ஊழியத்திற்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது.

சென்னை ஜெபக் குழுத்தலைவர்களின் வீடு சந்திப்பு:

நமது இயக்கத்தின் ஸ்கேன் பிரிவு செயலருடன் இணைந்து 16-ம் தேதி அன்று சில ஜெபக்குழுக்களின் தலைவர்களை அவர்கள் குடும்பத்துடன் சந்தித்து குடும்பங்களில் நிகழ்ந்த சுக துக்க செய்திகளை குறித்து விசாரித்து ஜெபித்துவந்தோம்.

நிலத்திலே விழுந்த கோதுமை மணி:

நமது இயக்கத்தில் 18 வருட காலம் பணியாற்றிய திரு. ஜி. குமார் அவர்கள் கடந்த 17 ஜனவரி அன்று தன்னுடைய 45-வது வயதிலே இறைவனின் மகிமைக்குள் பிரவேசித்தார். அவர் சுவிசேஷ ரதத்திலே தன்னுடைய பணியினை செய்துகொண்டிருந்தார். அவருடைய துணைவியார் திருமதி. சாவித்திரியையும், சந்தோஷ வித்யாலயாவில் பயின்று கொண்டிருக்கிற அவருடைய இரு பிள்ளைகளையும் ஜெபத்திலே நினைவு கூருவோம். இந்த ஈடுசெய்ய முடியாத இழப்பின் நேரத்தில் சகோதரியுடன் கூட நின்று தோள் கொடுத்த நமது ஜெபக்குழுத்தலைவர்களுக்கு நன்றி கடன் பட்டவனாகிறேன்.

பிப்ரவரி மாதத்தின் என்னுடைய நிகழ்ச்சிகளுக்காக ஜெபியுங்கள்

போதகர் அருட்பொழிவு நிகழ்ச்சி அம்ரீத்சர்:

அம்ரீத்சர் பேராயத்தின் பேராயர் மாமறை திரு. சமந்தராய் அவர்கள் நம்முடைய 26 மிஷனரிகளுக்கு பிப்ரவரி 4-ம் தேதி போதகர் அருட்பொழிவு செய்துவைக்க தீர்மானித்துள்ளார்கள். ஊழியத்திற்கு மிகுந்த பேருதவியாக இருக்கும் இந்த காரியத்திற்காக பேராயர் அவர்களுக்கு மிகுந்த நன்றி நவில்கிறோம்.

மிஷனரிகளுக்கான நேர்காணல்:

புதிய மிஷனரிகளைத் தேர்ந்தெடுக்கும் நேர்காணல் பிப்ரவரி 8-ம் தேதி நடக்கவிருக்கிறது. திரளான வாலிபர்கள் இதில் பங்கு பெறவும், அர்ப்பணமுள்ள நபர்கள் தேர்ந்தெடுக்கப்படவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

தேசியத் திட்டக் கூடுகை:

வருடந்தோறும் நடக்கும் தேசியத் திட்டக் கூடுகை பிப்ரவரி 10 மற்றும் 11-ம் தேதிகளில் சென்னையில் நடக்கவிருக்கிறது. 9-ம் தேதி 12 மணிநேர உபவாச தினமாக கடைபிடிக்கப்படுகிறது. கர்த்தரின் வழி நடத்துதலுக்காகவும், கூடுகையில் அவரின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

217-வது செயற்குழு கூட்டம்:

பிப்ரவரி 11 மற்றும் 12-ம் தேதிகளில் 217-வது செயற்குழு கூட்டம் சென்னையில் நடக்கவிருக்கிறது. உங்கள் ஜெபம் வேண்டுகிறோம்.

புதிதாக நியமணம் செய்யப்பட்டுள்ள செயலர்களுக்கான பயிற்சி:

புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள செயலர்களுக்கான பயிற்சி நாக்பூரில் நடக்கவிருக்கிறது. 15 மற்றும் 16-ம் தேதிகளில் நாக்பூரில் தங்கி அவர்களுக்கு பயிற்சி கொடுக்கும்படியாக வாஞ்சிக்கிறேன்.

டிவிஷனல் செயலர்கள் கூடுகை:

டிவிஷனல் செயலர்களுக்கான உபவாச ஜெபம் மற்றும் திட்டக் கூடுகை 20-ம் தேதி முதல் 23-ம் தேதி வரை நடைபெற இருக்கிறது.

ஈரோடு ஸ்கேன் கூடுகை:


பிப்ரவரி 24 மற்றும் 25-ம் தேதிகளில் ஈரோடு மாநகரில் ஸ்கேன் உறுப்பினர்களின் கூடுகை மற்றும் பிற ஊழியங்களில் கலந்துகொள்ள விருக்கிறேன்.

வட இந்திய மண்டல மிஷனரிகளுக்கான வேற்று கலாச்சார பயிற்சி:

வட இந்திய மண்டல மிஷனரிகள் பங்கு பெறும் வேற்று கலாச்சாரத் தொடர்பு பயிற்சி 28-ம் தேதி முதல் ஜான்சி நகரில் தொடங்கவிருக்கிறது.

உங்களுடைய ஜெபங்களுக்காகவும் எல்லா வழிகளிலும் நீங்கள் செய்துவருகிற உதவிகளுக்காகவும் மிகவும் நன்றி கடன் பட்டவனாயிருக்கிறேன். சந்திக்கப் படாதவர்களைத் திரளாய் சந்திக்கும்படி அனைத்து மிஷனரிகளுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். உங்களுடைய முழு மனதுடன் கூடிய ஆதரவு நமது இயக்கத்தின் தரிசனத்தை நிறைவேற்ற அருகாமையில் அழைத்துச் செல்லும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



அருட்திரு. S. ஜாண் பெர்லின்



முகவுரை:

பல நேரங்களில் தேவன் ஒரு பெரிய காரியத்தைச் செய்யும்படி நம்மை தேர்ந்தெடுக்கும் போது நம்மிடம் இருந்து வரும் முதல் பதிலே எதிர்ப்பும் பின்வாங்குதலுமாக இருக்கிறது. நிலைமை என்னவென்பது தேவனை விட நமக்குத் தான் நன்கு தெரியும் என நினைத்துக்கொள்கிறோம். இந்த எண்ணம் தான் நாம் எதிர்த்து நிற்க காரணமாகிறது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் தேவன் நம் பட்சத்தில் இருப்பது நமக்கு மிகுந்த சந்தோஷம் அளிக்கிறது. ஆனால் அவர் கரத்தில் பயன்படும் முதன்மை கருவியாக இருக்க தான் தயங்குகிறோம். இதற்கு மோசே விதிவிலக்கல்ல. மோசேக்கு ஆபிரகாமின் தேவனிடத்திலிருந்து நேரடியான அழைப்பு வந்தது.

யாத்:3:11-ன் பின்னணி

தேவன் ஆபிரகாமுக்கு சொன்னபடியே இஸ்ரவேலர் எகிப்தில் 400 வருஷத்தை கழித்தனர். அக்காலக்கட்டத்தின் இறுதியில் அடிமைகளாக்கப்பட்டும் இருந்தனர். எனினும் இவர்கள் சேவிக்கும் ஜாதிகளை நான் நியாயம் தீர்ப்பேன் என்றும் நான்காம் தலைமுறையிலே இவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பாலும் தேனும் ஓடும் தேசத்திற்குள் கொண்டு சேர்ப்பேன் என்றும் ஆபிரகாமுக்கு தேவன் வாக்குரைத்திருந்தார்.(ஆதி.15:13-16).

இஸ்ரவேல் ஜனங்களின் கூக்குரலைக் கேட்டு தேவன் மோசேயை அழைத்து ஒரு வேலையை ஒப்படைத்தார். ஜுவாலிக்கிற முட்செடியின் நடுவிலிருந்து பெயர் சொல்லி அழைத்த தேவனின் குரலை மோசே தெளிவாகக் கேட்டார் (யாத்.3:4). உடனே மோசே தைரியமாக மட்டுமல்லாமல் தாழ்மையாக இதோ அடியேன் என்றார். தேவன் மோசேயிடம் "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன்" என்றும் இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அழைத்து வரும்படி உன்னை நான் பயன்படுத்துவேன் என்றும் கூறினார் (யாத்.3:7- 10).

தேவனின் குரலை காதால் கேட்டதனால்

மோசேக்கு அந்த சத்தம் 'உன்னத மான தேவனுடைய அழைப்பு' என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எரிகிற முட்செடியிலிருந்து தேவன் மோசேயை பெயர் சொல்லி அழைத்த போதோவென்றால் 'இதோ அடியேன்' என பயத்திலோ விரும்பாமலோ அல்லது ஒரு தாழ்மையினாலோ கூறி இருக்கலாம். ஆனால் அடுத்த கேள்வியே மோசே தேவனிடம் கேட்பது என்னவென்றால் "பார்வோனிடத்திற்குப் போகவும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும் நான் எம்மாத்திரம்" (யாத்.3:11) என்பதுதான். மோசே தேவக் கட்டளையை உடனே ஏற்றுக்கொள்ளாமல் அதற்கு மாறாக **ஐந்து சாக்குப் போக்குகளை** காரணமாகச் சேர்த்துக்கொண்டார்.

1. மோசேயின் முலாவது காரணம்: நான் எம்மாத்திரம் – நான் தகுதி யற்றவன் நான் பொருத்தமானவன் அல்ல என்பது (யாத்.3:11). தேவன் நிறைவேற்றும்படி அழைத்த பெரிதான திட்டத்தைச் செயல்படுத்த தான் தகுதி யற்றவன் என்றும் தான் 'ஒருவனால் மட்டும்' இயலாதது என்றும் உணர்ந்தார். தேவன் மோசேக்கு பிரதியுத்தரமாக நான் உன்னோடு இருப்பேன் (யாத்.3:12) என்றார். ஜனத்தின் விடுதலை மோசேயின் திறனை சார்ந்ததாக இல்லாமல் தேவ பிரசன்னத்தையும் வல்லமையையும் சார்ந்தே இருந்தது.

2. மோசேயின் இரண்டாவது காரணம்: எந்த அதிகாரத்தின் பேரில் தான் இஸ்ரவேலின் இரட்சகன் ஆவது என்ற கேள்விக்கு அவரிடமே பதில் இல்லை என்பது தான் (யாத்.3:13-22) அவர் யெகோவா, ஆதி முதல் இருக்கிற சிருஷ்டி கர்த்தா தான் தன்னை எகிப்துக்கு அனுப்புகிறார் என்று தேவன் மோசேயிடம் கூறினார். மோசே யிடம் அண்ட சராசரத்தின் நித்திய தேவன் தன்னுடைய மகா நாமத்தை ''இருக்கிறவராகவே இருக்கிறேன்'' என செயல்படும்படி கூறி, அவ்வாறே இஸ்ரவேல் ஜனங்களிடமும் சொல்லி, இந்த தேவன் அவர்கள் அனைவரையும் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு தங்கள் முற்பிதாவாகிய ஆபிரகாமுக்கு வாக்கருளிய தேசத்தில் கொண்டு சேர்ப்பார் என சொல்ல சொன்னார்.

3. மோசேயின் மூன்றாவது காரணம்: சாத்தியமான ஒன்று அது என்னவென்றால் இஸ்ரவேல் ஜனங்களுள் ஒருவரும் தன்னை தேவன் அழைத்தார், அனுப்பினார் என்பதை நம்பார்கள் என்பதே (யாத்.4:1-9). அதற்கு தேவன் பிரதியுத்தரமாக மோசேயை அனுப்பியது தேவன் என நிரூபிக்கவும், ஜனங்கள் நம்பத்தக்கதாக மோசே நடப்பிக்கும்படி இயற்கைக்கு அப்பாற்பட்ட மூன்று அற்புத அடையாளங்களைக் கொடுப்பேன் என்றார்.

a) முதல் அடையாளம்: கோல் சர்ப்பமாக மாறுவது. மோசே சர்ப்பத்தின் தலையை அல்லாமல் வாலை பிடித்து எடுக்கையில் திரும்ப அது கோலாக மாறுவது. இதில் மோசே எகிப்து நெறிகளுக்கு மாறாக, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதையும், இவ்வாறே தான் தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் சாஸ்திரங்களின்படி அல்லாமல் தேவனுடைய ஆவியைக் கொண்டும், வார்த்தையைக் கொண்டும் விடுவிப்பார் என்பதையும் கற்றுக் கொண்டார்.

b) இரண்டாவது அடையாளம்: மோசே யின் கையில் வெண்குஷ்டம் பிடித்தது.

c) மூன்றாவது அடையாளம்: தண்ணீர் இரத்தமாக மாறியது.

இவை ஒவ்வொன்றிலும் ஒரு ஆவிக்குரிய பாடத்தைக் கற்றார் மோசே. அவைகள் மூலம் தேவன் அவருக்கு போதித்ததாவது: இயற்கையானவற்றை இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளாகவும், சாதாரண மானவைகளை அதிசயமானவை

களாகவும் மாற்ற இந்த தேவ வல்லமை யால் கூடும் என்றும் அதே வல்லமையைக் கொண்டு தான் இஸ்ரவேலின் மீட்பும் நிகழப்போகிறது என்றும் உணர்த்தினார். இவைகளுக்குப் பிறகும் மோசே தேவனை எதிர்த்து சாக்குப் போக்கு எழுப்பினார்.

4. மோசேயின் நான்காம் காரணம்: (யாத்.4:10-12) நான் வாக்கு வல்லவன் அல்ல என்றும், திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன் என்றும் கூறினார். ஆனால் சுவாரசியமான விஷயம் என்னவென்றால், அப்.7:22-ல் மோசே தன் வனாந்திர ஜீவியத்துக்கு முன்பாக எகிப்திலிருந்த போது வாக்கு வல்லவனாக இருந்ததாக பார்க்கிறோம். ஆக ஒன்று அவர் உண்மை யிலேயே பேச்சுத் திறனை இழந்திருக்க வேண்டும் அல்லது இதையும் வெறும் ஒரு சாக்குப் போக்காக கூறி இருக்க வேண்டும். அதற்கு கர்த்தர் நான் உன் வாயோடே இருந்து நீ பேச வேண்டியதைப் போதிப்பேன் என்றார்.

5. மோசேயின் ஐந்தாவது காரணம்: நான் தகுதியானவன் அல்ல ஆதலால் நீர் அனுப்ப சித்தமாய் இருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றார். (யாத்.4:13-17) இந்த கட்டத்தில் தான் தேவன் மோசேயின் மேல் கோபம் மூண்டவரானார் என வேதம் கூறுகிறது. அப்போது கர்த்தர் மோசேயின் தமையன் ஆரோனை மோசேயுடன் அனுப்புவேன் என்றும் ஆரோன் மோசேக்கு வாயாகவும் மோசே ஆரோனுக்கு மேலானவனாகவும் இருப்பார் என்றும் சொன்னார். தேவனு டைய இருதயத்தில் மீட்பை குறித்த திட்டமும் தம் ஜனங்களை அடிமைத்தனத்தி லிருந்து விடுவிக்க வேண்டும் என்ற விருப்பமும் இருந்தது. அதற்காக பல நேரங்களில் தனது பணியை நிறைவேற்ற அசாத்தியமான நபர்களைத் தேர்ந்தெடுத் திருக்கிறார். யோனா, கிதியோன், தாவீது, நீங்கள் மற்றும் நான் அவருக்கு முன்னிற்கும் மனிதனைக் கடந்து நித்திய திட்டத்தைப் பார்க்கிறார். அவர் நமது திறன், பணம், அழகு இவற்றையல்லாமல் தேவ மகிமைக்காக, அவர் சித்தத்தை நிறைவேற்ற நாம் தயாராக இருக்கிறோமா என்றுதான் பார்க்கிறார்.

தேவன் நம்மை அவருடையப் பணிக்காக அழைக்கும்போதெல்லாம் நாமும் இப்படித்தானே கேட்கிறோம்! "ஆண்டவரே நீர் என்னை அனுப்ப நான் எம்மாத்திரம்?" என்னை விட்டுவிட்டு வேறு யாரையாவது தெரிந்து கொள்ளும் என்பதற்காக நாம் நம்முடைய தோல்விகளை எல்லாம் பட்டியலிட்டு எத்தனைக் காரணங்களை கூறுகிறோம். ஆனால் என்றாவது நாம் நம் தேவன் நம்மை தோல்விகள் வழியாக எத்தனை பாடங்களை / அனுபவங்களை கற்றுத் தந்து இந்த தருணத்திற்காக தான் உருவாக்கி வந்தார் என்பதை ஒரு நிமிடம் நின்று சிந்தித்து இருக்கிறோமா?

அண்ட சராசரத்தைப் படைத்து ஆளும் சிருஷ்டி கர்த்தாவாகிய சர்வ ஞானி, சர்வவல்ல தேவன் உங்கள் தோல்விகள் மற்றும் உங்கள் நிறை குறைகளை அறிந்தவர், உங்களைப் பெயர் சொல்லி அழைக்கிறார். அவர் உங்களை அழைக்கும் திட்டத்தை செயல்படுத்த உங்கள் தற்போதைய நிலை உங்களைப் பொருத்தமானவர்களாக்குகிறது. நீங்கள் தேவனிடம் கேட்கும் கேள்விகள், கடந்து வந்த பாதைகள், தோல்வியாக நீங்கள் பார்ப்பவைகள் இவைகளைக் கொண்டுதான் தேவன் உங்களை உருவாக்கி, பயிற்றுவித்திருக்கிறார். இவை அனைத்தும் அவர் நீங்கள் செய்யும்படி நியமித்ததை நீங்கள் நிறைவேற்றவே. ஆதலால் நீங்கள் "என்னை அனுப்ப நான் எம்மாத்திரம்?" என்ற கேள்வியை மாற்றி "இதோ அடியேன் என்னை அனுப்பும்" என்று கூறுங்கள். அவர் உங்களை அழைக்கிறாரானால் அந்த வேலையைச் செய்ய சரியான நபர் நீங்கள் தான் என்று அர்த்தம்.

- திருமதி. ஜான்சி ராணி ராபின்சன்,
விரிவுப்பணி ஊழியர், ராஞ்சி.

பணித்தள விஜயம்

டெல்லி, ஹரியானா



சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியிலிருந்து 15 பேர் கொண்ட குழுவாக கடந்த வருடம் அக்டோபர் 15-23 ஆகிய தேதிகளில் டெல்லி, ஹரியானா போன்ற பணித்தளங்களைப் பார்வையிட சென்றோம். இப்பணித்தள விஜயத்தின் விளைவாகச் சென்ற நபர்கள் மூலமாக 2 மிஷனரிகள் மற்றும் ஓர் சிறுவர் ஆதரவாளர்கள் கிடைக்கப்பெற்றுள்ளோம். நாங்கள் பணித்தளங்களுக்காக பாரப்பட்டு ஜெபிக்கவும், அங்குள்ள தேவைகளை எங்களால் இயன்றவரை சந்திக்கவும் வேண்டுமென்ற தீர்மானத்தோடு வீடு திரும்ப தேவன் கிருபைப் பாராட்டினார்.

– கௌரவ விரிவுப்பணி செயலர், வண்ணாரப்பேட்டை.



மிஷனரிப் பிரதிஷ்டை

ஜனவரி 7-ம் தேதி நடைபெற்ற குடும்பக்கூடுகையில் மகாராஷ்டிரா மாநிலத்தில் பணிசெய்யும் நமது மிஷனரி T. சீனு பிரதிஷ்டை செய்யப்பட்டார். இப்பிரதிஷ்டையானது போதகர்கள் அருட்திரு. அன்பழகன் (ECI), அருட்திரு. செல்வராஜ் அவர்களின் தலைமையில் தேவநாம மகிமையில் நடைபெற்றது பிரதிஷ்டை செய்யப்பட்ட மிஷனரியை ஜெபத்தாலும், பொருளாலும் திரு. செல்வன் டேவிட் நிக்சன் அவர்கள் தாங்குகிறார். அவர்களின் குடும்பத்தை தேவன்தாமே ஆசீர்வதிப்பாராக.

– கௌரவ விரிவுப்பணி செயலர், ரெட்ஹில்ஸ்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு – திருவள்ளூர்

விசுவாச மகளீரின் அழகிய மாநாடு - 2024

உண்டியல் படைப்பு ஆராதனை

நாள்: 26 ஜனவரி 2024 வெள்ளிக்கிழமை (குடியரசு விடுமுறையன்று)
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை
இடம்: வசந்தம் திருமண மண்டபம், பட்டாபிராம், சென்னை – 72.
குறிப்பு: *பதிவு கட்டணம்: ரூ.20/-* தொடர்பு : 26852200

இத்துடன்

இந்தக் கல்வியாண்டு 2023-2024-ல் பத்தாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதப்போகும் நமது மிஷனரிகளுடைய பிள்ளைகளின் பெயர்ப்பட்டியலை இணைத்துள்ளோம்.



தயவுடன் உங்கள் வழக்கமான ஜெபங்களில் அவர்களைத் தாங்குமாறுக் கேட்டுக்கொள்கிறோம். மேலும் நமது அங்கத்தினரின் பிள்ளைகள் மற்றும் விடுதிப் பிள்ளைகளையும் உங்கள் ஜெபத்தால் தாங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

10 -ம் வகுப்பு

வ. எண்	பிள்ளையின் பெயர்	பெற்றோரின் பெயர்
1.	அபூர்வ்	– அருட்திரு. ஜுபராஜ் பர்தன்
2.	சுப்ரா ஜோதி கரோடா	– திரு. கரோடா பிஸ்வோ ரஞ்ஜன்
3.	ஜேன் அகிலா	– அருட்திரு. ஜாண்சன் சங்கர் ஜ.
4.	அனுகிரஹ் பால் புன்யா	– அருட்திரு. சாவ்புன்யா
5.	ஆராதனா	– திரு. பிரபாகரன் என்.
6.	இம்மானுவேல் ஜெப சாம்	– திரு. பாலமுருகன் வி.
7.	ஷாரோன் ஏஞ்சலின்	– அருட்திரு. ஜான் சாமுவேல் ஏ.
8.	சாம்பால் பேட்ரிக்	– அருட்திரு. ஜசக் தனசிங் ஆர்.
9.	சுதீப் ஜாய் பீரோ	– அருட்திரு. சஞ்ஜய் குமார் பீரோ
10.	ஷிரில்டன் சிங்	– அருட்திரு. பால் தயாசிங் ஏ.ஒய்.
11.	அனோகா நர்சாரி	– திரு. ஆரோன்சிங் நர்சாரி
12.	எமிலின் ஜெஸ்ஸி	– திரு. ஃபெலிக்ஸ் கமாலியேல்
13.	டெரிக் காஃபேலிஸ்	– அருட்திரு. ராமசாமி ஜெரோம் வி.
14.	ஷெர்லின் ரேஷ்னா	– திரு. எபி ஞானசெலின் எஸ்.
15.	ஷாரோன் பர்ஜோ	– திரு. பவுலஸ் பர்ஜோ
16.	சுஸ்மிதா சலோனி	– அருட்திரு. சுர்கார் ரமேஷ்பாய்
17.	அர்ப்பனா மிராக்கிளின் ஹாரீஸ்	– திரு. ஜான் பால் ஹாரீஸ்
18.	அங்கித் பன்னா	– திரு. ஜாகர் சாய் பன்னா
19.	ஜாபேஸ் ஷைன்	– அருட்திரு. ரமேஷ் வேல்ராஜ் ஏ.
20.	ஸ்டெனிஷ் கிரஹாம்பெல்	– அருட்திரு. ஸ்டீபன் ஆர்.
21.	ஹனனி ஜெஹோஷிபா	– அருட்திரு. பீட்டர் பிரபாகரன்

22.	சீகன் பால்க் ஜோஷ்வா	– திரு. விக்டர் ஜெயசீலன் சி.
23.	ஆட்லின் பிளஸ்ஸி ஜெ.	– திரு. ஜான் தினேஷ். ஜி.எம்.
24.	ஜேசன் பால்	– திரு. கொன்கா கிரி பாபு
25.	ஜாய்ஸ் சோஃபியா	– திரு. மினுகா பாபு மேத்யூ
26.	விபினியா ஆன்ட்டோ கிஃப்டி	– அருட்திரு. அகஸ்டியன் பிஜி

12 -ம் வகுப்பு

வ. எண்	பிள்ளையின் பெயர்	பெற்றோரின் பெயர்
1.	பிரின்ஸ் சார்லஸ்	– அருட்திரு. ஹரமோகன் பிரபுதாஸ் நாயக்
2.	மகிமா	– அருட்திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
3.	ஜடா கிரேஸ்	– அருட்திரு. ஜாண் ஸ்டீபன் Y.
4.	பிரசன்ஜித் ஜோதி	– அருட்திரு. பென்ஜமின் ஜோதி
5.	ஜோசியா ஆண்டர்சன் சாமுவேல்	– அருட்திரு. அருளானந்தம் வெங்கடேசன் M.
6.	கரிஷ்மா L.	– அருட்திரு. ஹாமுவேல் லிமா
7.	ரூஃபஸ் குமார் S.	– திரு. ஹேமந்த குமார் சபார்
8.	செலினா சிங்	– அருட்திரு. சமரேந்திர சிங்
9.	பிரகதி	– திரு. பிதுஷ் குமார் நாயக்
10.	ஜெபா ஷரோன் சிங்	– திரு. சுகாந்தோ குமார் சிங்
11.	நிகிடோலி பிளஸ்ஸி சோஃபி	– அருட்திரு. எக்டோ சோஃபி
12.	ஜடா துபிலா	– அருட்திரு. மேத்யூ K.
13.	சாமுவேல் ஜாய்சன்	– அருட்திரு. வினயராஜ் M.
14.	பிளஸ்ஸி இவாஞ்சலின் விஜய்	– அருட்திரு. விஜயகுமார் K.
15.	ஏஞ்சலின் பிளஸ்ஸி	– அருட்திரு. ஸ்ரீனிவாசன் J.
16.	ஸ்பெர்ஷிகா பால்	– அருட்திரு. பால் தயாசிங் A .Y.
17.	மௌமிதா	– அருட்திரு. முன்னா மொஹன்தியர்
18.	தீனா	– அருட்திரு. டேனியேல் விஜயராஜ்
19.	ஜாஸ்மின்	– அருட்திரு. கார்த்திகேயன் S.
20.	ஆஷர் டேவிஷ்	– திரு. செந்தில் முருகன் V.
21.	கேத்ரின் கிஃப்டி	– திரு. பிரத்யூஷ் நாயக்
22.	குளோரினா B. K.	– திரு. பசவராஜா K.
23.	அபிஷேக் போடார்	– திரு. போடார் அம்ருத்பாய் பச்சுபாய்
24.	தெரிஸ்சா G.	– திரு. கெடம் ஸ்ரீனிவாச ராவ்
25.	ஸ்டெஃபி R. மலிகர்	– அருட்திரு. ராஜா B.
26.	ஜஸ்டின் கிங் பால்	– திரு. கோன்கா கிரி பாபு
27.	ஜாண் வெஸ்லி	– திரு. மீனுகா அடப்பா (எ) மேத்யூ
28.	ஆஷிஷ் ஜாண்	– திருமதி. ஊர்மிளாபேன்
29.	சோனாலி கன்சால்வ்ஸ்	– திருமதி. ஹேனா குமாரி தான்டி
30.	பிரவீன் குமார்	– திருமதி. பத்மாவதி



மகிமைக்குள் பிரவேசித்தார்கள்

திருமதி. டாக்டர். V. ஜான்சிபாய் கனகராஜ் அவர்கள், இராஜபாளையத்திலுள்ள நமது கௌரவ விரிவுப்பணி செயலாளரும், ஓய்வுப்பெற்ற அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியருமான டாக்டர். M. கனகராஜ் அவர்களின் மனைவியும், நமது மிஷனரியாகிய திருமதி. ஆல்பி ஹாரிஸ் அவர்களின் தாயாருமாவார். இவர் கடந்த 40 ஆண்டுகளாக நமது ஊழிய விரிவாக்கப்பணிகளின் வளர்ச்சிக்காக ஜெபிப்பதிலும், ஜெபக்குழுக்களை நடத்துவதிலும், ஊழியத்தேவைகளைத் தியாகத்துடன் சந்திப்பதிலும் அதிக ஈடுபாடு காட்டினார். மிஷனரிகளைத் தாங்குவதிலும், திருச்சபைகளைக் கட்டுவதிலும், விசுவாசிகளின் குழந்தைகளை ஆதரிப்பதிலும் இவரது பங்கு பெரிதும் காணப்பட்டது. திருச்சபை உறவுப்பணியிலும், டாடல்களைப் பாடுவதிலும் அதிக ஆர்வம் கொண்ட இவர், இராஜபாளையம் CSI தூய பவுல் ஆலய பாடகர்குழு உருவாக காரணமானதுடன், அக்குழுவின் தலைவராகவும் செயல்பட்டு வந்தார்.

சிறப்பு மகப்பேறு மருத்துவரான இவர், நல்லதொரு சமுகசேவகியாக மட்டுமல்லாது, நமது ஊழிய ஆரம்ப காலங்களில் மிஷனரிகள் தங்களது குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்காக தனது வீட்டில் ஒரு தனியறையை ஒதுக்கி மருத்துவசேவையும் செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது அமைதியான புன்முறுவலுடன்கூடிய விருந்தோம்பலும், பிறரை ஊக்குவித்த செயலும், குடும்பத்திலும் பிறரிடத்திலும் காண்பித்த நற்குணசாலியான வாழ்வும், நமது இயக்கப்பணிகளுக்கு தனது கணவரோடு சேர்ந்து தோள்கொடுத்து செயல்பட்டு வந்தமையும் மிகவும் பாராட்டத்தக்கதாகும். மேலும் இவர் நமது இயக்கத்தின் செயற்குழு அங்கத்தினராகவும் பல வருடங்கள் செயல்பட்டு வந்தார். கடந்த 5 ஆண்டுகளாகவே பெலவீனப்பட்டிருந்த இவர், 2023 டிசம்பர் 27-ம் தேதி இரவு 9 மணிக்கு, தனது 79-வது வயதில் இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்தார். இவரது பிரிவால் வாடும் இவருடைய கணவர் மற்றும் பிள்ளைகளின் குடும்பங்களை தேவன் ஆற்றித்தேற்றி பெலப்படுத்த ஜெபிப்போம்.

- திரு. J. ஜெயபிரகாஷ் (FMPB - கௌரவ விரிவுப்பணி செயலர், இராஜபாளையம்)



கருங்கல் பணிமாவட்டத்தில் ஜெபக்குழுத்தலைவராகவும், ஸ்கேன் பொறுப்பாளராகவும் மிகச் சிறப்பாகப் பணியாற்றி வந்த திரு. துரைராஜ் அவர்கள் எதிர்ப்பாராதவிதமாக 13.12.2023 அன்று இருதய பெலவீனத்தினிமித்தமாக தனது 69-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். சமுதாயத்தில் அனைவரிடமும் அன்போடும், பண்போடும் பாசத்தோடும் பழகக் கூடியச் சிறந்தப் பண்பாளர். அவர் விட்டுச் சென்றுள்ள மனைவி, பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளின் துயரம் நீங்க நமது ஜெபங்களில் அவர்களை நினைவு கூருவோம்.

- கௌரவ விரிவுப்பணி செயலர், கருங்கல்.



1989-ம் ஆண்டு முதல் திரு. ரூஸ்வெல்ட் அவர்களோடு, தனது மகன் ஜெபதாஸ் சாமுவேலை மதுரை முழுவதும் சைக்கிளில் பயணித்து, விரிவுப்பணி ஊழியத்தில் அதிக ஈடுபாடு கொள்ளச்செய்து, தற்போது ஜம்புரோபுரம் ஜெபக்குழுத்தலைவராகச் செயல்பட உற்சாகப்படுத்திய அன்பு தகப்பனார் திரு. S. ஞானக்கண் அவர்கள் 06.10.2023 அன்று தனது 76-வது வயதில் மகிமைக்குள் பிரவேசித்தார்கள். மிஷனாரிகளை கனம் பண்ணுவதிலும், உபசரிப்பதிலும் அலாதி பிரியம் கொண்டவர்கள். அவர்கள் விட்டுச்சென்றுள்ள மனைவி மற்றும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

– விரிவுப்பணி செயலர், மதுரை.



மதுரை, நரிமேடு ஜெபக்குழுத்தலைவியாக 15 ஆண்டு களாக சிறப்பாக செயல்பட்டு வந்த திருமதி. தேவநேசம் செல்வராஜ் அவர்கள் 09.12.2023 அன்று தனது 63-வது வயதில் மகிமைக்குள் பிரவேசித்தார்கள். தேவநேசம் அக்கா அவர்கள் நமது அலுவலகத்தில் வாரந்தோறும் புதன்கிழமை நடைபெறும் உபவாச ஜெபம், 1000 மணி நேர ஜெபங்கள் என அனைத்து ஜெபங்களிலும் நேர் முழங்கால்படியிட்டு கண்ணீரோடு ஜெபிக்கும் பழக்கமுள்ளவர்கள். பணித்தள விஜயம் செய்து மிஷனாரிகளை உற்சாகப்படுத்தினார்கள். தனது கணவரின் பெலவீன நேரங்களிலும் ஆதரவாளர்கள் வீடுகளுக்குச் சென்று ஜெபித்து காணிக்கை சேகரித்து கொடுத்தார்கள். இவர்களின் கணவர் திரு. செல்வராஜ் அவர்களும் 27.10.2023 அன்று தனது 67-வது வயதில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர்கள் விட்டுச்சென்றுள்ள 2 மகன்கள், 2 மருமக்கள், 4 பேரப்பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

– விரிவுப்பணி செயலர், மதுரை.



மதுரை, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூத்த ஜெபக் குழுத்தலைவரும், அனைவராலும் பாஸ்டர் வாரிதி ஐயா என அன்பாய் அழைக்கப்படும் அவர்கள் வயது முதிர்வின் காரணமாக தனது 80-வது வயதில் மகிமைக்குள் பிரவேசித்தார்கள். அன்னார், மதுரையில் சுயாதீன திருச்சபையின் பாஸ்டராக இறைப்பணி செய்த நிலையில், FMPB மிஷனரிகளால் ஈர்க்கப்பட்டு, தன்னார்வமாக தன்னை இணைத்துக்கொண்டு, காணிக்கை சேகரிப்பதிலும், ஜெபக்குழுவை நடத்துவதிலும், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முழு இரவு ஜெபம் நடத்துவதற்கு தங்கள் பகுதியிலுள்ள சிற்றாலயத்தை திறந்து கொடுத்தும், ஊழியத்தை வளரச்செய்தவர்கள். தனிப்பட்ட வாழ்வில், நேர்மை, எளிமை, தாழ்மை, அமைதி போன்ற கிறிஸ்துவின் நற்பண்புகளைத் தரித்து சாட்சியாக வாழ்ந்தவர்கள். ஆன்மீக வாழ்வைப் பொறுத்தவரையில், ஐயா ஒரு நடமாடும் வேதப் புத்தகம். ஆழமான சத்தியத்தை எளிமையாக அள்ளித்தந்தவர். தேவபணியை நிறைவேற்றி 19.12.2023 அன்று இவ்வுலக ஓட்டத்தை நன்மையாக ஓடி முடித்தார். அன்னாரது இழப்பால் வாடும் குடும்பத்தினருக்கு கர்த்தர் தாமே இறை சமாதானத்தையும், ஆறுதலையும் தர ஜெபிப்போம்.

– நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு, மதுரை.

காலச் சுவடுகள்



தந்தை டேமியன்

தந்தை டேமியன், பெல்ஜியம் நாட்டின் ரோமன் கத்தோலிக்க திருச் சபையைச் சேர்ந்த பாதிரியார். இவர் 1873-1889 அதாவது தனது மரணம் வரை ஹவாய் இராஜ்ஜியத்தில், மோலக் காயின் கலௌப்பா தீபகற்பத்திலுள்ள ஒரு குடியேற்றத்தில் அரசால் கட்டளையிடப்பட்ட தனிமைப்படுத்துதலிலுள்ள தொழு நோயாளர் (ஹான்சன் நோய்) உள்ளவர்கள் மத்தியில் ஆற்றிய இறைப் பணிக்காக பெரிதும் அங்கீகரிக்கப் படுகிறார்.

இளமைப்பருவம்

சோள வியாபாரி ஜோன்ஸ் பிரான்சிஸ்கஸ் ஜோசஃப் டி. வெஸ்டர் மற்றும் அவரது மனைவி ஆன்-கேத்தரின் வெளட்டர் ஆகியோரின் 4-வது மகனாக ஃப்ளெமிஷ் என்ற இடத்தில் ஜனவரி 3, 1840-ல் தந்தை டேமியன், பிறந்தார். தனது 13-வது வயதில் குடும்பப் பண்ணையில் வேலை செய்ய, தன் பள்ளியைவிட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பின்னர் பிரைன் லி காம்டே-லுள்ள ஒரு கல்லூரியில் படித்து 'இயேசு மற்றும் மேரியின் புனித இதயங்களின் சபையில்' சேர்ந்தார். 1858-ல் "மீட்பாளர்களால்" வழங்கப்பட்ட பணியின் விளைவாக ஈர்க்கப்பட்டார். பெல்ஜியம் லூவெயினிலுள்ள "இயேசு மற்றும் மேரியின் புனித இதயத்தின் தந்தைகளின்" நவசியட்டில் இணைந்தார்.

இறைப்பணிக்கு அர்ப்பணம்

தந்தை டேமியன், 7 அக்டோபர் 1860-ல் இயேசு மற்றும் மேரியன் புனித இதயங் களின் தந்தைகளின் நவிசியட்டில் இறைப்பணிக்காக அனுமதிக்கப்பட்டார். டேமியன் தனது இறையியல் படிப்பின் போது தனது வருங்கால மிஷனரி பணிக்காக பாரத்தோடு தினமும் ஜெபித்து வந்தார். 3 ஆண்டுகளுக்குப் பிறகு அவரது சகோதரர் தந்தை பம்ஃபில் (ஆகஸ்டே) நோயின் காரணமாக ஹவாய்க்கு ஒரு மிஷனரியாகப் பயணம் செய்ய முடியாமல் போனபோது,டேமியன் அவரது இடத்தைப் நிரப்ப அனுமதிக்கப்பட்டார். டேமியனைப் பற்றி வாசிக்கும்போது தேவனது கரம் அவரது வாழ்வில் அமைதி யாய் செயல்பட்டதை நாம் உணராமல் இருக்க முடியாது.

ஹவாயின் நிலைமை

மார்ச் 19, 1864-ல் டேமியன் ஓஹூவி

லுள்ள ஹொனலுலு துறைமுகத்திற்கு வந்தார். மே 21-ம் தேதி பாதிரியாராக அபிஷேகம் பண்ணப்பட்டார். 1865-ம் ஆண்டில், டேமியன் ஹவாய் தீவிலுள்ள வடக்கு கோஹாலாவிலுள்ளத் கத்தோலிக்க மிஷனுக்கு நியமிக்கப்பட்டார். அவர் ஓஹூவில் பல திருச்சபைகளில் பணியாற்றிக் கொண்டிருந்த போது, ஹவாய் இராஜ்ஜியம் தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் பொது சகாதார நெருக்கடியால் போராடிக்கொண்டிருந்தது. தொழுநோய், பெரியம்மை, காலரா, காய்ச்சல், சிபிலிஸ் மற்றும் கக்குவான் இருமல் போன்ற தொற்றுநோயால் பூர்வீக ஹவாய் திருச்சபையினரில் பலர் இறந்துக் கொண்டிருந்தனர்.

வெளிநாட்டு வர்த்தகர்கள், மாலுமிகள் மற்றும் ஹவாய் தீவுகளுக்கு குடியேறிய வர்களால் பரவிய இத்தகையப் பிணி களால் நோய் எதிர்ப்பு சக்தியைப் பெற்றிராத ஆயிரக்கணக்கான ஹவாய் மக்கள் இறந்தனர். இங்குப் பணி செய்வது ஆபத்து என்று உணர்ந்த பிஷப் லூயிஸ் டெசிரே மைக்ரெட், எந்த ஒரு நபரையும் 'கீழ்ப்படிதல்' என்ற பெயரில் அங்கு அனுப்ப விரும்பவில்லை. நீண்ட பிரார்த்தனைக்குப் பிறகு, 4 பாதிரி யார்கள் தன்னார்வலர்களாக செல்ல முன் வந்தனர். அவர்களில் ஒருவர் தந்தை டேமியன். தன்னார்வலர்கள் மாறி மாறி குடிமக்களுக்கு உதவ பிஷப் திட்டமிட்டார்.

தந்தை டேமியனின் இறைப்பணி

1873, மே 10-ல் முதல் தன்னார்வத் தொண்டரான தந்தை டேமியன் கலுபாபாவிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட குடியேற்றத்துக்கு வந்தார். அப்பொழுது அங்கு 600 தொழுநோயாளிகள் இருந்தனர். டேமியன் அவர்களுடன் இணைந்து ஒரு தேவாலயத்தைக் கட்டவும், செயின்ட் பிலோமினாவின் திருச்சபையை நிறுவவும் செய்தார். ஒரு பாதிரியாராக பணியாற்றுவதோடு மட்டுமல்லாமல் வீடுகள் மற்றும் தளபாடங்களைக் கட்டினார். சவப்பெட்டிகளை உருவாக் கினார். கல்லறைகளைத் தோண்டினார். கலுபாபாவிற்கு வந்து 6 மாதங்களுக்குப் பிறகு, அவர் ஐரோப்பாவிலுள்ள தனது சகோதரரான பம்ஃபிலுக்கு இவ்வாறு எழுதினார். ''நான் இயேசு கிறிஸ்து வுக்குள் எல்லாவற்றையும் பெறு வதற்காக தொழுநோயாளிகளுடன் தொழுநோயாளியாக என்னை உருவாக்குகிறேன்.''

இந்த நேரத்தில், தந்தை டேமியன் தொழுநோயாளிகளை கவனித்து, அவர்களது வாழ்க்கை நிலையை மேம்படுத்த சமூகத்தில் தலைவர்களை நியமித்தார். தொழுநோயாளர்களுடன் கையால் உணவு சாப்பிட்டு, அவர்களுடன் சமமாக வாழ்ந்தார். தந்தை டேமியன் கற்பித்தல், வீடுகளுக்கு ஓவியம் தீட்டுதல், பண்ணைகளை ஒழுங்கமைத்தல் மற்றும் சிற்றாலயங்கள், சாலைகள், மருத்துவமனைகள் மற்றும் தேவாலயங்களை அமைப்பதன் மூலம் அவர்களுக்கு உதவினார். அதே நேரத்தில் ஒரு பாதிரியாராகவும் பணியாற்றி கத்தோலிக்க நம்பிக்கையை தொழுநோயாளிகளுக்குப் பரப்பினார்.

தொழுநோயாளிகளைப் பற்றி வெளி உலகம் என்ன நினைத்தாலும், தேவனின் பார்வையில் அவர்கள் எப்போதும் விலைமதிப்பற்றவர்கள் என்று தந்தை டேமியன் அவர்களிடம் கூறினார். சில வரலாற்றாசிரியர்கள் சமூகத்தின் ஒரு திருப்புமுனைக்கு இவர் ஒரு ஊக்கியாக இருந்ததாக நம்பினர். அவரது தலைமையின் கீழ் அடிப்படை

சட்டங்கள் அமல்படுத்தப்பட்டன. குடிசைகள் வர்ணம் பூசிய வீடுகளாக மேம்படுத்தப்பட்டன. வேலை செய்யும் பண்ணைகள் ஒழுங்கமைக்கப்பட்டன. பள்ளிகள் நிறுவப்பட்டன. அவரது கோரிக்கை மற்றும் தொழுநோயாளிகளின் வேண்டுகோளின்படி, தந்தை டேமியன் மொலோகாயில் அனுமதிக்கப்பட்டார்.

தந்தை டேமியனுக்கு கிடைத்த அங்கீகாரம்

ஹவாயி இராஜ்ஜியத்தின் மன்னர் டேவிட் கலாக்காவுவா தந்தை டேமியனுக்கு தம் அரசின் உயரிய விருதுவாகிய "கலக்காவுவா அரசு அணியின் வீரத் தளபதி" என்னும் விருதை வழங்கிக் கௌரவித்தார். பட்டத்து இளவரசி லிதியா லிலியூக்கலானி, தந்தை டேமியன் தொழுநோயாளர் நடுவே ஆற்றி வந்த பணிபற்றி உலக நாடுகளுக்கு தனது அனுபவத்தைப் பகிர்ந்துகொண்டார். அதன்விளைவாக ஐரோப்பா, அமெரிக்க நாடுகளில் இவர் வெகுவாக அறியப்பட்டார் அமெரிக்க புராடஸ்டன்ட் சபைகள் டேமியனின் பணி தொடர்ந்து நடப்பதற்கு பணம் திரட்டி அனுப்பினர். இங்கிலாந்து திருச்சபையும் மருந்துகள், உடைகள், உணவுப்பொருட்கள் போன்றவற்றை அனுப்பி உதவி செய்தன. அரசால் வழங்கப்பட்ட விருதுப்பதக்கத்தை தந்தை டேமியன் அணிந்ததற்கானச் சான்று இல்லை. இருப்பினும் அது அவரது இறுதிச் சடங்கின் போது அவரது பக்கத்தில் வைக்கப்பட்டது.

வியாதியும் மரணமும்

தந்தை டேமியன் ஹவாயில் 16 வருடங்கள் பணிபுரிந்து, கலுபாபாவின் தொழுநோயாளிகளுக்கு ஆறுதல் அளித்துவந்தார். 1884 டிசம்பரில், அவர் குளிப்பதற்குத் தயாராகிக் கொண்டிருந்தபோது, டேமியன் கவனக் குறைவாக தனது கால்களை கொதிநீரில் வைத்துவிட்டார். இதனால் அவர் கால் களில் கொப்புளங்கள் ஏற்பட்டபோதும் வலியை அவரால் உணர முடியவில்லை. 11 வருடங்கள் தொழுநோய்க் காலணி யில் பணிபுரிந்த அவர் தான் தொழு நோயால் பாதிக்கப்பட்டதை அறிந்து கொண்டார். மக்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டறிய இது ஒரு பொதுவான முறைமையாகும். அவர் நோயுற்றவராய் இருந்தபோதிலும் இன்னும் கடுமையாக உழைத்தார்.

நோய் அவரது உடலை மெதுவாக்கிய போதிலும், டேமியன் தனது கடைசி ஆண்டுகளில் மிகவும் பரபரப்பான செயல்களில் ஈடுபட்டார். மீதமுள்ள நேரத்தில் அவர் முடிந்த வரை பல திட்டங்களை முன்னெடுத்து முடிக்க முயன்றார். நோயுற்ற அவருக்கு உதவவும், அவரது பணியில் உதவி செய்யவும் 4 தன்னார்வலர்கள் வந்தனர். கான்ராடி என்பவர் அவரது ஆயர்பணியை ஏற்றுக்கொண்டார். கோப் என்பவர் ஒரு வேலை செய்யும் மருத்துவமனையை ஏற்பாடு செய்தார். டட்டன், சமூகத்தின் கட்டடங்களின் கட்டுமானம் மற்றும் பரா மரிப்பில் ஈடுபட்டார். சின்னெட், டேமியனின் உடல் நிலையை கவனித்துக்கொண்டார். கவனில் கை, கால் கட்டுடன், கால் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் டேமியன் தன் மரணம் நெருங்கிவிட்டதை அறிந்தார். அவர் 23 மார்ச் 1889 அன்று படுத்தப்படுக்கையாகி ஏப்ரல் 15 அன்று காலை 8 மணிக்கு தனது 49-ம் வயதில் தொழுநோயால் இறந்தார். டேமியன் மொலோகாயில் வந்தபோது முதன் முதலில் தூங்கிய அதே பான்டனஸ் மரத்தின் அடியில் அடக்கம் செய்யப்பட்டார்.

- ரூபன் கிளெமெண்ட்

பணித்தள விஜயம்

மஹாராஷ்டிரா



தேவனுடைய ஒத்தாசையால் சென்னை தாம்பரம் பணிமாவட்டத்திலிருந்து, 12 நபர்கள் கொண்ட குழுவாக 20.10.2023 அன்று புறப்பட்டு, மகாராஷ்டிரா மாநிலம், எட்டப்பள்ளி பணித்தளம் சென்றடைந்தோம். நமது மிஷனரி திரு. குல்தீப் அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்று ஆலப்பள்ளி சிறுவர், சிறுமியர் விடுதிக்கு அழைத்துச் சென்றார். மறுநாள் காலை அங்கிருந்து புறப்பட்டு எட்டர்காசா மற்றும் கெட்டப்பள்ளி கிராம ஆலயங்களைப் பார்வையிட்டு விசுவாசிகளைச் சந்தித்து ஜெபித்தோம். விசுவாசிகளின் சாட்சிகளையும் கேட்டோம். கடினமான இப்பகுதிகளில் எதிர்ப்புகளின் மத்தியில் ஆலயங்கள் எழுப்பப்பட்ட சரித்திரத்தைக் கேட்டு தேவனைத் துதித்தோம். விசுவாசிகள் எங்களிடம் காட்டிய அன்பு அவர்களை எங்கள் உறவினர்களாகவே நினைக்கத் தூண்டியது. கடின சூழல் நிறைந்த இப்பகுதிகளில் நாங்கள் பத்திரமாய் சென்றுவர, தேவன் தமது சிறகுகளால் மூடிக்கொண்டதை உணர முடிந்தது. நீண்ட பயணத்திற்குப் பின்னர் இரவு மீண்டும் ஆலப்பள்ளியில் தங்கி, 22.11.2023 அன்று காலை எட்டப்பள்ளி, ரேக்கனார் ஆலயங்களில் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டோம். திரும்பும் வழியில் பர்சல்கோண்டி, பந்தேவாவுறி ஆலயங்களைப் பார்வையிட்டோம். 23-ம் தேதி காலை ஆலப்பள்ளி விடுதியின் சிறுவர், சிறுமியருடன் செலவிட்டோம். விடுதி பிள்ளைகளின் உற்சாகமான பாடல்கள், ஆராதனைகள், சாட்சிகள், தேவசெய்தி ஆகியவற்றில் மகிழ்ந்தோம். இப்பணித்தளத்தின் மிஷனாரிகள் மற்றும் சுதேச ஊழியர்களைச் சந்தித்தோம். சுமார் 400 கி.மீ. நீண்ட தூர பயணத்தைக் குறுகிய காலத்தில் உற்சாகமாய் மேற்கொள்ள உன்னதர் பெலன் தந்து உதவினார். நமது மிஷனரிகளின் அர்ப்பணிப்பு, தேவசித்தம் செய்வதில் உறுதி, சோர்வுறாது, அயராது செய்யும் ஆத்தும ஆதாய பணியில் எதிர்ப்புகளை எதிர் கொள்வதில் அவர்களின் வைராக்கியம் எங்களை வியக்க வைத்தது. எங்களால் செய்ய இயலாததை, நமது மிஷனரிகள் செய்து வரும் ராஜரீக பணியில், விவரிக்க இயலாத விளைவுகளை தேவன் செய்திடவேண்டும் என தொடர்ந்து இவர்களுக்காகத் தினமும் மன்றாடும் இதயத்தோடு 23-ம் தேதி மாலை அங்கிருந்து புறப்பட்டு 24-ம் தேதி அன்று காலை சென்னை வந்தடைந்தோம்.

- திருமதி. இங்கிரித் ராய், தாம்பரம்.

மகிமைக்குள் பிரவேசித்தார்



கோயம்புத்தூரிலுள்ள பாப்பநாயக்கப்பாளையம் பகுதியில் வசித்து வந்த நம் மூத்த ஜெபக்குழுத்தலைவர் திரு. ராஜன் அவர்கள் 25.12.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுக்களை நடத்தி, 20 வருடங்களுக்கும் மேலாக நம் ஊழியங்களைத் தாங்கி வந்தவர்; நம் பணித்தளங்களை அவ்வப்போது பார்வையிட்டு, நம் ஊழியர்களை உற்சாகப்படுத்தி வந்தவர். அவர் விட்டுச்சென்றுள்ள மனைவி, 3 பிள்ளைகள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

- செயலர், கோவை பிராந்தியம்

மறக்க முடியாத மாமனிதர்கள்



சகோ. மோகன்
(1988 - 2021)

சகோ. மோகன் அவர்கள், 1988-ம் ஆண்டு ஜூன் 15-ம் தேதி தர்மபுரி மாவட்டத்திலுள்ள சநாயன்டஹள்ளி கிராமத்தில் கிறிஸ்துவை அறியாத பெற்றோரான திரு. ராமன் மற்றும் திருமதி. முனியம்மா ஆகியோரின் மகனாகப் பிறந்தார். இவருடைய தாய் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதால், சகோ. மோகனுக்கு வேதாகமத்தை ஒழுங்காக வாசிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது, தேவ ஆவியானவர் இவரோடு இடைபடவே, இவரும் இயேசு கிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். ஆதலால், இவர் தனது தாயாரோடுகூட அருகாமையிலுள்ள தேவாலய ஆராதனையில் கலந்துகொண்டு, கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ந்து வந்தார்.

ஒருசமயம், இவர் வேதாகமத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது, யோவான் 12:25-26 வசனங்கள், இவரை ஆண்டவருக்கு முழுநேர ஊழியம் செய்ய வழிநடத்தியது. ஆதலால், இவர் அநேக மிஷனரிகளின் வாழ்க்கை சரிதைகளை வாசிக்கலானார். அதன் விளைவாக, இவர் தனது நண்பர்களோடு இணைந்து மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துரைத்து வந்தார்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் 'அறைகூவல்' பத்திரிக்கையை வாசித்து, இவ்வூழியத்தில் 2017-ம் ஆண்டு இணைந்து, மிஷனரிப்பயிற்சியை முடித்தவுடன் ராஜஸ்தான் மாநிலத்தில் ஜீப் ஊழியக்குழுவினரோடு சேர்ந்து பணியாற்றினார். 2019-ம் ஆண்டு செல்வி. அர்ச்சனாவைத் திருமணம் செய்து, உத்தரப்பிரதேசத்திலுள்ள கான்பூர் பிராந்தியத்தில் ஊழியம் செய்து வந்தார். வெகு குறுகிய காலத்திலேயே மூன்று கிராமங்களில் சுவசேஷம் அறிவித்து, 11 பேரை கிறிஸ்துவண்டை வழிநடத்தி, ஒரு ஆராதனைக்குழுவையும் நிறுவினார்.

உத்தரப்பிரதேசத்திலுள்ள கான்பூர் பிராந்தியத்தில் கொரோனா தொற்று நோயின் தாக்கம் அதிகம் காணப்பட்டபோது, அங்கிருந்த சகோ. மோகன் அவர்களும் அந்நோயினால் பாதிக்கப்பட்டார். கடந்த 2021 ஏப்ரல் 26-ம் தேதி, அருகாமையிலுள்ள மருத்துவமனையொன்றில் இவர் சிகிச்சை பெற்று வந்தார். இவருக்கு அந்நோயின் வீரியம் அதிகரிக்கவே, உடனிருந்த மிஷனரிகள் இவரை ஆரியா என்ற பெரிய மருத்துவமனைக்கு ஏப்ரல் 29-ம் தேதி அழைத்துச் சென்றனர். அங்கும் சிகிச்சை பலனளிக்காமல் போகவே, மித்தி பட்டணத்திலுள்ள ஒரு மருத்துவமனையில் இவர் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். ஆனால் 2021 மே 2-ம் தேதி, இவர் இவ்வுலக

ஓட்டத்தை முடித்து, தனது தேவனிடத்திற்கு அழைத்துக்கொள்ளப்பட்டார். நமது மிஷனரிகளும், திருச்சபைப் போதகர்களும் சேர்ந்து கான்பூரிலுள்ள கிறிஸ்தவ கல்லறைத்தோட்டத்தில் இவரது சரீரத்தை நல்லடக்கம் செய்தனர். தனக்குக் கொடுக்கப்பட்ட குறுகிய காலத்தில், சகோ. மோகன் தன்னால் இயன்றதை இவ்வுலகில் தேவநாம மகிமைக்காகச் செய்து முடித்தார். சகோ. மோகன் அவர்கள், மிஷனரிப்பணியாற்றிய காலங்களில் ஆழமான அர்ப்பணிப்போடும், சகஊழியர்களுடன் தாழ்மையோடும், பணிவோடும் காணப்பட்டார். இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மனைவி அர்ச்சனாவையும், 3 வயது மகன் ஜேசன் ஜெனிஷையும் நமது ஜெபங்களில் தவறாமல் நினைத்துகொள்வோம்.

– அருட்திரு. அறிவர். E. ராஜன்

மகிமைக்குள் பிரவேசித்தார்



திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை – சமாரியாவை பூர்விகமாக கொண்ட நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூத்த தலைவர், திரு. J.P. பொன்னுதுரை அண்ணன் வயது 84 அவர்கள் 23.12.2023 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவரது வாழ்க்கை ஒரு சகாப்தம் தூத்துக்குடி, திருநெல்வேலி. மாவட்டத்தின் தென் பகுதகளில் அநேக மிஷனரி ஜெபக்குழுக்களை உருவாக்கியவர். தன்னார்வ தலைவர்களை உருவாக்கியவர். முதலூர் தூய மிகாவேல் மேல்நிலைப் பள்ளியில் இயற்பியல் துறை ஆசிரியாராக பணி செய்த அந்த நாட்களில் தன்னை தேடி வந்த தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்கவில்லை. ஏனெனில் மிஷனரி பணிகள் தடைபட்டுவிடக்கூடாது என்ற ஒரே எண்ணமுடையவர்களாக வாழ்ந்தார். தனது எளிய வாழ்க்கையின் மற்றும் மென்மையான வார்த்தையின் மூலமும் மிஷனரி பணிக்கு அநேகரை கவர்ந்திழுத்தவர். நல்ல ஆலோசகர். அநேக மக்களுக்கும், மாணவர்களுக்கும் உதவிக்கரம் நீட்டியவர். இயக்கத்தின் முக்கிய பணிகளில் ஒன்றான செயற்குழு உறுப்பினராக (1990-1995) இருந்து செயல்பட்டார். திசையன்விளை பணி மாவட்ட கௌரவ விரிவுப்பணி செயலராகவும் மற்றும் ஸ்கேன், அது சார்ந்த ஊழியங்களில் பல ஆண்டுகளாக பணியாற்றினார்கள். அண்ணனை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

ஆலயப்பிரதிஷ்டை

ஜார்க்கண்ட் மாநிலம், சந்தால் டும்கா பிராந்தியத்திலுள்ள சகார்ஜோடி பணித்தள, சன்னியா குனி மாவட்டம், ஜரோனிபுரத்தைச் சேர்ந்த திருமதி. பிரியா கிஃப்டிலின் அவர்கள் மூலம் சரஸ்பாத் என்ற கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயம் 14.01.2024 அன்று தேவநாம மகிமைக்காக மங்கலப்படைப்பு செய்யப்பட்டது.





பணித்தள விஜயங்கள்

மஹாராஷ்டிரா

சென்னை ரெட்ஹில்ஸ் பகுதியிலிருந்து கடந்த 19.10.2023 அன்று புறப்பட்டு மகாராஷ்டிராவிலுள்ள பணித்தளங்களைப் பார்வையிடச் சென்றோம். ஜவஹர் பகுதியிலுள்ள மிஷனரிகளின் இனிய வரவேற்புக்குப்பின் அங்குள்ள பணித்தளங்கள் மற்றும் பேட்பா சிறுவர் விடுதியைப் பார்வையிட்டோம். பின்பு வார்லி இனமக்கள் நடனத்தோடு எங்களை வரவேற்றனர். அங்குள்ள விசுவாசிகளின் சாட்சி பகிர்வுகளைக் கேட்டோம். ஜெப வேளையில் அநேகர் பிசாசுகளின் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றனர். அதன் பின்னர் பூசேரா பணித்தளத்திற்கு வந்து அங்குள்ள ஆலயத்தில் காலை முதல் மதியம் வரை உபவாச ஜெபம் ஏறெடுத்தோம். CDC பிள்ளைகளை சந்தித்தோம். இரவில் அங்குள்ள விசுவாசிகளின் வீடு சந்திப்பில் தேவன் செய்த அநேக அற்புதங்களைக் கேட்டோம். ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு எங்கள் சாட்சிகளைப் பகிர்ந்துகொண்டோம். அங்கு நடைபெற்ற ஜெப வேளையில் அநேகர் சுகமும், பிசாசு கட்டிலிருந்து விடுதலையும் பெற்றனர். பின்னர் தானு என்ற பணித்தளத்திற்கு வந்து அங்குள்ள கைநாடு, முசல்பாடா மற்றும் ஜார்லி கிராமங்களின் ஆலயங்களைக் பார்வையிட்டு, மூப்பர்களின் சாட்சிகளையும் அர்ப்பணிப்பையும் பார்த்து நாங்களும் ஊழிய பாரத்துடன் அர்ப்பணிப்புடன் ஊர் திரும்பினோம்.

– கௌரவ விரிவுப்பணி செயலர், ரெட்ஹில்ஸ்.

அஸோம்



சென்னை ரெட்ஹில்ஸ் பகுதியிலிருந்து கடந்த நவம்பர் 4 முதல் 12 வரையுள்ள தேதிகளில் 15 பேர் கொண்டக்குழுவாக அஸோம் பணித்தளங்களைப் பார்வையிடவும், அங்குள்ள மிஷனரிகளின் குடும்பங்களுடன் ஐக்கியம் கொள்ளவும் தேவன் கிருபை செய்தார். மேலும் கோகாமுக், நாராயண்பூர், காலாபாரி, மஜுலி, லக்கிம்பூர், தகுவாகனா ஆகிய 6 பணித்தளங்களை நேரில் சென்று பார்க்கவும் பணித்தள கூடுகைகளில் விசுவாசிகளோடு பங்குபெறவும் தேவன் கிருபை பாராட்டினார். பல தடைகள், பல சவால்கள், பல தியாகங்கள் மத்தியிலும் மிஷனரிகள் ஊழியம் செய்து வருவது பாராட்டக்கூடியது. எங்கள் குழுவிலுள்ளோர் பாடல்களைப்பாடி எங்களுடைய அனுபவச்சாட்சிகளை பகிர்ந்து, மிஷனரிகளுடன் இணைந்து அப்பகுதியில் ஊழியம் செய்ய ஆண்டவர் அனுக்கிரகம் செய்தார். தொடர்ந்து இப்பணித்தள ஊழியர்களுக்காக, குழந்தை திருமணம், குழந்தைகளின் குடிப்பழக்கம், பிசாசின் பிடியில் சிக்கியுள்ள மக்களுக்காக, விபச்சார ஆவிகளின் கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட தொடர்ந்து ஜெபிப்போம் என தீர்மானித்தோம். இப்பணித்தள விஜயத்தை அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைத்துக்கொடுத்த தேவாதி தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

– கௌரவ விரிவுப்பணி செயலர், ரெட்ஹில்ஸ்.

மறக்கமுடியாத மாமனிதர்கள்

உங்கள் கையில் உள்ளதா?



இப்பொழுது விற்பனையில்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் வெளியீடுகள்

வாங்கிப் பயன்பெறுங்கள்!



உலகமெங்கும்
தேவ பணியினை
நிறைவேற்றிய 50 மிஷனெரிகளின்
வாழ்க்கை வரலாறு பாகம் - 1
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்
73 மிஷனெரிகளின் வாழ்க்கை
வரலாறு பாகம் - 2 ஆகியவை

மறக்கமுடியாத மாமனிதர்கள்
என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.
FMPB-யின் மைல் கற்கள்
மாபெரும் அறுவடை என்ற தலைப்பிலும் கிடைக்கும்.



இப்பொழுது விற்பனையில்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்

பென்டிரைவுகள் வெளியீடு



VOL-4

காலத்தால்
அழியாத
மிஷனரித்
தரிசனங்களைப்
பெற்றிட
வாங்கிப்
பயன்பெறுங்கள்.

VOL-1

காலத்தால்
அழியாத
மிஷனரித் தரிசனப்
பாடல்களின் தொகுப்பு



VOL-2

2020 மாநில முகாம்
பாடல்கள் மற்றும்
240 மிஷனரித்
தரிசனப்பாடல்களின்
தொகுப்பு



VOL-3

2022 மாநில முகாம்
பாடல்கள் மற்றும்
450 மிஷனரித்
தரிசனப்
பாடல்களின்
தொகுப்பு





பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பெஞ்சமின் ஜோதி
திரு. ஆரோன்சிங் நர்சாரி, திரு. சங்கர் M.
திருமதி. காந்தி தேவி சிவ்சங்கர்

ஜம்மு

ஜம்மு பிராந்தியம்:
வசாவே எலேஷ் பிரபு & சுனிதா வெச்சா

துதிக்க: ஜம்மு ராய்மோடு மத்திய பல் கலைக்கழகத்தில் மாணவர்கள் மத்தியில் சுவிசேஷக் கூட்டம் நடத்த தேவன் கிருபை செய்தார். சுமார் 70 பேர் கூடியிருந்த மாணவர்கள் மத்தியில் அவர்களின் கேள்விகளுக்கும், கிறிஸ்தவத்தை குறித்ததான சந்தேகங்களுக்கும் பதில்கள் மூலமாக விளக்கம் கொடுக்க தேவன் விசேஷ ஞானம் அருளினார். ராணுவத்தினர் வசிக்கும் சைனிக் காலனி பகுதியில் வெளிப்புற சுவிசேஷம் மூலம் 45 பேருக்கு கிறிஸ்துவைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. பசிக்லான் மற்றும் பிஷ்நாத் பகுதியில் அமைதியான முறையில் சிறப்பாக கிறிஸ்துமஸ் பெருவிழா கொண்டாடப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சத்தியத்தினை கேட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களும், ராணுவத்தினரும் வசனங்களால் தொடப்பட; கிறிஸ்மஸ் விழாவின்போது சந்திக்கப்பட்டுள்ள 367 நபர்களும் தேவனை இரட்சகராக ஏற்றுக்கொள்ள; அற்புதங்களை எதிர்பார்த்து ஜெபத்திற்கு வரும் நபர்கள் சுகம் கிடைத்ததும் சபைக்கு வருவதை நிறுத்திவிடுவதைக் கைவிட்டு, கிரமமாக வந்து ஆசீர்வாதத்தை தக்கவைத்துக்கொள்ள; பஞ்சாப் மாநிலத்திலுள்ள சில கிறிஸ்தவ தலைவர்கள் வலைதளம் மூலம் நடத்தும் ஆராதனையில் பங்கு பெற்று திருப்தி அடையும் விசுவாசிகள் ஞாயிறு ஆராதனைக்கும் தவறாமல் வர ஜெபிப்போம்.

நௌஷேரா: சியான்லுன்தாங் ஸௌ டி. & லிங்நெய்ஹோய்; சுபானி & எமி பாக்கியா

துதிக்க: காய் மற்றும் சேயால் கிராமங்களில் கடுங்குளிர் மத்தியில் கிறிஸ்துமஸ் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கிராமத்தின் அநேகம் பேர் வந்திருந்து கிறிஸ்து பிறந்ததின் நோக்கத்தினை அறிந்துச் சென்றனர். சபை மூப்பர் பச்சன்சிங்கின் இருசக்கர வாகனம் காரோடு மோதி விபத்திற்குள்ளான போதும் காயமின்றி அவர் தப்புவிக்கப் பட்டார். ஹேமந்த் இருதய மாரடைப்பின் வேளையிலும், அஞ்சுதேவி உடலின் பல்வேறு உபாதைகளிலின்றும் சுகமாக்கப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தங்களுடைய போதை மருந்து வியாபாரத்திற்கு இடையூறாக இருக்கும் என்று கிறிஸ்தவத்தை விட்டு பின்வாங்கியுள்ள சிர் கிராம விசுவாசிகளுக்காக; இவர்களைச் சந்திக்க ஊருக்குள் போக முயற்சிக்கும் நம் ஊழியர்களை ராணுவமும் காவல் துறையினரும் தடுக்கின்றனர். அவர்கள் பாவத்தொழிலை விட்டு மீண்டும் கிறிஸ்துவின் அன்பிற்குள்ளாக வர; காய் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கொடுத்த வீர்சிங் பிறருடைய தூண்டுதலால் ஆலயம் தன்னுடையது என்று கூறி வருகிறார். அவரின் மனமாறுதலுக்காக ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பிரபாகர் N., திருமதி. வசந்தராணி ஜார்ஜ்
திருமதி. ரோஷிலா மொசாஹரி
திருமதி. ஜாய்ஸ் ஷோபனா பொன் அகஸ்டின்
திரு. மார்கூஸ் மால்தோ R.
திருமதி. மணினி பெபர்த்தா அஸ்தாபன்
திரு. ஜோசப் கிருபாகரன் S.

ஹிமாச்சலப் பிரதேசம்

தானேதார்: ஜெபர்சன் &காயத்ரி

துதிக்க: திருமணமாகி 7 வருடங்களுக்கு பிறகு ஜெபத்தின் மூலமாக சித்தா – விசால் தம்பதியினர் குழந்தை பாக்கியம் பெற்றனர். கிறிஸ்துமஸ் பெருவிழா தானேதார் கிராமத்தில் விமரிசையாக கொண்டாடப்பட்டு கிராமத்தினர் அனைவருக்கும் நற்செய்தி அறிவித்து இனிப்பு வழங்கப்பட்டது. நேபாளி மொழியிலுள்ள ஒலிவடிவ 15 வேதாகமம் விநியோகிக்கப்பட்டது. 115 நபர்கள் கிறிஸ்து பிறப்பினை குறித்ததான வீடியோ காட்சியைக் கண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: திருட்டில் தங்களுடைய அனைத்து உடமைகளையும் இழக்க கொடுத்துள்ள ரத்தன் – மஞ்சு தம்பதியினருக்காக; ஆலயத்திற்கு புதிதாக வரும் மதனகோபால் தனது சிறுநீரக பாதிப்பிலிருந்து குணமடைய; கிறிஸ்துமஸ் தினத்தன்று இனிப்புகள் வாங்கி சுவிசேஷம் கேட்டுச் சென்றுள்ளவர்களின் மனதில் தேவன் பேச ஜெபிப்போம்.

ஆனி:

ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

துதிக்க: எட்டு வருடங்களாக பிசாசின் பிடியில் சிக்கி பக்கவாதத்தினால் நடக்கவியலாமலிருந்த பாங்குதேவி 6 மாத விடாத ஜெபத்தினால் பக்கவாதத்திலிருந்து குணமடைந்து ஆலயம் வருகிறார். சபைகளின் காணிக்கை கணக்குகள் கிராம வங்கியில் தொடங்கப்பட தேவன் உதவி செய்தார். பிரா ராஜு குடும்பத்தில் பெண் குழந்தை பிறப்பதற்கும், மூங்காராம் பெரிய வீடு கட்டி ஜெபக்கூட்டம் நடத்தி வீடு திறப்பு விழா நடத்தவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரோகித், காசிலா, திலக் பிம்லா, கமலா குடும்பங்கள் கிறிஸ்துவை அறிக்கையிட நிலவும் தடைகள் நீங்க; சிவ்ராம் மற்றும் பகத் ராம் குடும்பங்களில் நிலவும் பிரச்சினைகள் நீங்க; புதிய கிராமங்களில் நமது ஊழியங்கள் விரிவடைய ஜெபிப்போம்.

நேர்வா:

எஸ். இம்மானுவேல் & சங்கீதா ஜெசிந்தா

துதிக்க: கிராமத்தினர் அநேகம் பேர் கலந்து கொண்ட கிறிஸ்துமஸ் பெரு விழா பரானு, பங்கால் மற்றும் அடால் கிராமங்களில் நடைபெற்றது. காண வந்த அனைவரும் பொறுமையாக நற்செய்தி கேட்டனர். அடால் சபையின் மூப்பர் லலித் அவர்கள் சென்ற வாகனம் மலையிலிருந்து உருண்டபோதும் லலித் எவ்வித பாதிப்புமின்றி தப்ப தேவன் உதவினதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அனைத்து சபைகளின் கணக்கு களை நிர்வாகிக்க துவங்கப்பட உள்ள வங்கி கணக்குகளுக்கு வங்கி மேலாளர் அனுமதி தர; பரானு மற்றும் அடால் கிராமத்தில் நிலவும் எதிர்ப்புகள் மறையவும், ஆராதனை நடத்த நல்ல இடம் கிடைக்கவும், தியாரா மற்றும் டுங்லேச் கிராம விசுவாசிகள் சந்திக்கும் எதிர்ப்புகளால் அவர்கள் சோர்ந்து போகாமல் விசுவாசத்தில் வளர; மிஷனரி குடும்பம் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. முருகம்மாள் எஸ்தர் ஆல்பர்ட் பிரபாகரன்

ராம்பூர்:

தெளஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

துதிக்க: ஊழியர் பிரகாஷ் சந்த் வயிற்று வலியினால் துவண்டுபோன நிலையில் மருத்துவமனையில் சென்று ஸ்கேன் எடுத்துப் பார்த்தபோது குடல் வெடித்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அறுவை சிகிச்சை செய்யப்பட்டு சுகமானார். கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் அனைத்து சபைகளிலும் எந்தவித எதிர்ப்போ, தொந்தரவோயின்றி சிறப்பாக நடைபெற்றன. உள்ளூர் பத்திரிக்கையிலிருந்து வந்திருந்து நமது நிகழ்ச்சியினை முழுவதும் படம் பிடித்துச் சென்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நேபாளி இனமக்கள் மத்தியில் செய்யப்படும் ஊழியம் விரிவடைய; கண்ணுராம்-சோனுதேவி குடும்பத்தை சாட்சியாக வைத்து அவர்கள் மூல மாகப் பலரை கிறிஸ்துவின் ஐக்கியத்திற் குள்ளாக தேவன் கொண்டு வர; சும்ரா பகுதியில் ஆரம்பிக்கப்பட இருக்கிற ஊழியங்கள் நல்ல பலனை தர; ஆலயம் வந்துகொண்டிருக்கிறவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து ஆலயம் செல்வதை தடுக்கும் சாதுராம் மனம் மாற ஜெபிப்போம்.

கர்சோக்:

பவன் குமார் & பிரபாஷினி தேவி

துதிக்க: சப்னா சகோதரியின் 5 வயது மகன் ரூபாய் நாணயத்தை விழுங்கி விட்டபோது, ஜெபம் செய்து சுலபமாக அதனை வெளியே எடுக்க தேவன் கிருபை செய்தார். பஸ்தான்பூர் மற்றும் கர்சோக் பகுதிகளில் கிறிஸ்துமஸ் ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத சகோதரி சில்பா தன்னுடைய மகளின் பிறந்த நாளுக்கு நமது ஊழியரை வீட்டுக்கு அழைத்து ஜெபம் செய்ய வேண்டினதினால், அங்கு கூடியிருந்தவர்களிடம் சுவிசேஷம் கூற நல்ல சந்தர்ப்பத்தை தேவன் ஏற்படுத்திக்கொடுத்தார். ஆலயம் வராமல் பின்வாங்கிப் போயிருந்த ப்ரீத்தி தன் கனவில் கிறிஸ்து வந்து எச்சரித்தாக கூறி மீண்டும் தன்னை சபையிலே இணைத்துக்கொண்ட தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆலயம் கிரமமாக வருவதை நிறுத்தியுள்ள புஷ்பா, மீரா மற்றும் சுஷ்மா ஆகியோர் மீண்டும் தேவ ஐக்கியத்திற்குள் வர; சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் மகேந்திர சௌகான், ரீட்டா, அபிஷேக் மற்றும் சில்பா குடும்பங்கள் தேவனை இன்னும் அறிந்துகொண்டு இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற; கோட் கிராமத்தில் ஒரு ஆராதனைக்குழுத் தொடங்கப்பட நாம் எடுக்கிற முயற்சியினை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜெபக்குமார் பெரியசாமி

பஞ்சாப்

அஹ்மத்கட் மண்டி:

கிருபா ரக்ஷனா பரே & ஷக்கினா

துதிக்க: விசுவாசி ஹர்பாலின் கணவர் பேருந்தின் பின்பக்க சக்கரத்தில் தவறி விழுந்து காயமின்றி தப்பினார். ஆலய நிர்வாக குழு உறுப்பினர் சனைய், லூதியானாவிற்கு பால் கொண்டுபோகும் வழியில் மற்றொரு இருசக்கர வாகனத்துடன் மோதி 130 லி பால் கீழே கொட்டி வீணாகி போனாலும் எந்தவித காயமுமின்றி தேவன் அவரை தப்புவித்தார். கிறிஸ்துமஸ் கீத பவனி எந்தவித தொந்தரவுமின்றி சிறப்பாக நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விழாக்கள் 4 இடங்களில் சிறப்பாக நடைபெற்றன. ராதா மற்றும் ஸ்ரீகாந்த் குடும்பங்கள் அநேக வருடங்களுக்குபின் ஜெபத்தினால் குழந்தை பாக்கியம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ராஜு, கிருஷ்ணா மற்றும் சமர்ஜித் குடும்பங்கள் ஆலயம் வந்து கிறிஸ்துவை அறிக்கையிட; பொய் புகாரில் வழக்கு புனையப்பட்டு சிறையில் இருக்கும் சுரஜ் விரைவில் விடுதலை செய்யப்பட; நடத்தப்பட இருக்கின்ற பெண்கள் கூடுகை, சிறு ஜெபக்குழுவினர் பயிற்சி போன்றவைகள் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

பட்டிண்டா:

சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா;
பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

துதிக்க: கிறிஸ்துமஸ் கீத பவனி எல்லா கிராமங்களிலும் சிறப்பாக நடத்தப்பட்டது. 4 இடங்களில் கிறிஸ்துமஸ் கீத ஆராதனை விமரிசையாக நடைபெற்றது. கிறிஸ்துமஸ் கீத ஆராதனையின் போது கூடிய சுமார் 1500 பேருக்கு நற்செய்தி பகிரப்பட்டது. அதில் 10 குடும்பங்கள் ஆலயத்திற்கு புதிதாக வர ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: திட்டமிட்டிருக்கிற விசுவாச அறிக்கையிடும் நிகழ்ச்சி, வெளிப்புற பஜன் நிகழ்ச்சி சிறு ஜெபக்குழு பயிற்சி போன்றவைகள் சிறப்பாக நடக்க; குல்தீப்சிங் மற்றும் ராதே ஷியாம் அதீத குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; ராம்பூரா பூல், சங்கத் மண்டி, தால்வாடி போன்ற இடங்களில் புதிய ஊழிய மையங்கள் ஏற்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் கைக்கூட ஜெபிப்போம்.

ஜைத்தோ:

சித்தரஞ்சன் தான்டி & தெஜஸ்விதா

துதிக்க: இந்த மாதம் 5 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாக அறிவித்தனர். கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகளின் போது சுமார் 1200 பேருக்கு நற்செய்தி பிரதிகள் கொடுக்கப்பட்டன. மூளை பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்த பசக்கானா கிராமத்தின் ஷோபியா ஜெபத்தின் மூலம் குணமடைந்தார். பசக்கானா கிராமத்தில் நமது ஊழியத்தை எதிர்த்துக்கொண்டிருந்த ஆங்ரிஸ்சிங் கிறிஸ்துமஸ் விழாவின்போது வந்திருந்து இறுதி வரை இருந்து பொறுமையாக தேவ வார்த்தையைக் கேட்டுச் சென்ற தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆறு மாதங்களாக சுகவீனத்தினால் படுக்கையிலிருக்கும் புதிய தொடர்பாளர் பரம்ஜீத் கௌர் சுகம்பெற; வான்டேர் கிராமத்தில் நமது ஊழியத்திற்கு விரோதமாக மக்களைத் தூண்டிவிடும் மந்தீப் கௌர் மனந்திரும்ப; நல்ல விசுவாச வாலிபர்களான குல்தீப், கமல், கோன் மற்றும் கரண் நல்ல வேலைகளைப் பெற; கோரா சிங், சுரேஷ் குமார் மற்றும் பிந்தர்சிங் நல்ல கிறிஸ்தவ மணமகள்களைப் பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. அற்புதம் செல்வி விஜய்
திரு. தெய்வநாயகம் சாமுவேல்
திருமதி. அனுகாமி எக்கா ஜாஹர் சாய்

ஃபரித்கோட்: சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால்சாடங்கி

துதிக்க: சக்காரியா மற்றும் குஜ்வானா கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் பறைசாற்றப்பட்டது. 8 கிராமங்களில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் கீத பவனி எந்த வொரு தொந்தரவுமின்றி அருமையாக நடைபெற்றது. ஃபரித்கோட், சப்பாவாலி மற்றும் சதீக் கிராமங்களில் சிறப்பாக நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் விழாக்களை சுமார் 500 பேர் கூடியிருந்து காண தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மராட், சப்பாவலி, காமியானா மற்றும் சதீக் கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் மற்றும் சத்சங் நிகழ்ச்சிகள் சிறப்பாக நடத்தப்பட; ரூப்யான்வாலா கிராமத்தின் 8 வயது சிறுமி ஏஞ்சலின் கால் அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெறவும், சிறுமி எழுந்து நடக்கவும்; சாப்பாவாலி கிராமத்தின் அருகாமையிலுள்ள சஜான்வாலி, வான், பஜுவாலா ஆகிய கிராமங்களில் நமக்கு புதிய தொடர்பாளர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

ஹரியானா

ரத்தியா: கார்த்திகேயன் & ஜெயந்தி

துதிக்க: இரத்த அணுக்கள் குறைவாக இருந்த நிலையில் ஜெபம் செய்ததினால் ரிங்குபாய் மற்றும் சன்னாபாயின் இரத்த அணுக்களின் எண்ணிக்கை சீரானது. குடும்பத்தினரின் ஊக்கமான ஜெபத்தினால் போதை மருந்தின் ஆதிக்கத்திலிருந்து பல்வீந்தர்சிங் விடுபட்டு ஆலயம் வருகிறார். M.P. சட்டர் ஆலய விசுவாசிகள் தாங்களாவே ஆலயத்திற்கு தேவையான ஒலிபெருக்கி சாதனங்களை வாங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: திருமணத்திற்கு பின் நான்கு வருடம் கழித்து மகப்பேறு அடைந்துள்ள சுனில் – மஞ்சு தம்பதியினருக்கு சுகமாக பிரசவம் நடந்தேற; திவானா மற்றும் ஜாடிதக்கல் கிராமங்களில் பெண்கள் ஜெபக்குழுகள் ஆரம்பிக்கப்பட; கணவர் தற்கொலை செய்து கொண்டதினால் பொருளாதார ரீதியில் குடும்பத்தை நடத்த கஷ்டப்படும் ஆஷாவுக்காக; 7 மாதங்களுக்கு முன் வீட்டைவிட்டு போன சந்தீப்சிங் சுகமாக வீடுதிரும்ப ஜெபிப்போம்.

முன்நிலைமை – பின்நிலைமை

ஒடிசா மாநிலம் ஜஷிப்பூர் பணித்தளத்தின் கிஜிரியா கிராமத்தைச் சேர்ந்த இளம் பெண் சினி பர்ஜோ. நீண்ட நாட்களாக பிசாசின் பிடியிலிருந்த இந்த பெண் மனப்பிறழ்வு ஏற்பட்டு சாப்பிடாமல் தூங்காமல் இருந்துள்ளார். பல இடங்களுக்கும் சென்று வைத்தியம் மற்றும் பிசாசின் காரியங்கள் அனைத் திற்கும் பரிகாரம் செய்தாலும் குணமாகாத நிலையில் அவ்வூரிலுள்ள நமது ஆலயத்திற்கு ஜெபிக்க அழைத்துவந்தனர். விசுவாசிகள் மற்றும் ஊழியர்கள் ஊக்கமாக ஜெபிக்கவே சில நாட்களிலேயே பூரண சுகமடைந்தார். மிகுந்த சந்தோசமடைந்த பெற்றோர் குடும்பத்துடன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர். ஆனால் சில மாதங்களில் விசுவாசத்திலிருந்து விலகி மீண்டும் பிற மத பூஜைகள் செய்ய ஆரம்பித் துள்ளனர். இந்த பெண் சினி மீண்டும் பிசாசின் தாக்குதலுக்குள்ளாகி இந்த முறை வீரியமாக பாதிக்கப்பட்டு தன்னுடைய துணிகளை முற்றிலும் களைந்தவளாய் ஊருக்குள் ஓடி, ஆடி யாருக்கும் கட்டுப்படாமல் இருந்திருக்கிறாள். பெற்றோர் தங்கள் தவற்றை உணர்ந்தவர்களாக ஆலயம் வந்து மன்னிப்பு கேட்டு அழுது ஜெபிக்கவே, தேவன் தயவாய் இரங்கி மறுபடியும் இந்த பெண்ணைக் குணப்படுத்தி இருக்கிறார். கர்த்தரை விட்டு எக்காலத் திலும் பின்வாங்க மாட்டோம் என்று பெண்ணின் பெற்றோர் தற்போது மிகுந்த பக்தி வைராக்கியத்துடன் வாழ்கின்றனர்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பெட்ரீசியா தமிழ் செல்வி குமார்
திரு. ஹமோம் நாபா சிங்

பர்வாலா:

மிண்டு குட்டும் & சுப்ராபாக்

துதிக்க: கராந்தானி கிராமத்தில் எதிர்ப்பின் மத்தியிலும் சிறப்பாக கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பெற்றோருடன் கருத்து முரண்பட்டு வீட்டைவிட்டு வெளியேறி பஞ்சாப் சென்ற வாலிபன் ராகுலுக்காக வீட்டார் கண்ணீரோடு ஜெபித்தபோது அவர் மனம் மாறி சுகமாக வீடு வந்து சேர்ந்தார். கைபிபூர் கிராமத்தின் 6 வயது சிறுவன் ஆஷிஷ்க்கு சிறுநீரகத்திலுள்ள கற்கள் அறுவைசிகிச்சை மூலம் அகற்ற மருத்துவர்கள் நாள் குறித்திருந்த சமயத்தில், வீட்டார் ஜெபித்ததினால் கற்கள் சிறுநீர் மூலம் வெளிவந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கராந்தனி, ஹாசன்கார், சனியானா, பர்வாலா, அம்ரஹட்டி மற்றும் பிந்த் பகுதிகளில் ஊழியத்திற்கு அதிகரித்துள்ள எதிர்ப்பு நீங்க; நடக்கவிருக்கும் 2 நாட்கள் வாலிபர்கள் முகாம் சிறப்பாக நடக்க, அதில் அநேக வாலிபர்கள் பங்கு பெற்று பலன் பெற; ஹசான்கார் கிராமத்தின் சகோதரி வீர்மட்டி புற்றுநோயிலிருந்து முற்றிலும் குணமடைய; அம்ரஹட்டி கிராமத்தின் விசுவாசி தர்சனாவை அவரது குடும்பத்தினர் விசுவாசத்தை கைவிடுமாறு மிரட்டுவதை நிறுத்தவும், அவர்களும் தேவப்பிள்ளைகளாக மாறவும் ஜெபிப்போம்.

உத்தராகண்ட்

உத்தம் நகர்: கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

துதிக்க: இனம்புரியாத நோயினால் பீடிக்கப்பட்டு படுத்தப்படுக்கையாக இருந்த பன்சாரிராத் கிராமத்தைச் சேர்ந்த 18 வயது வாலிபன் சுரஜ் நமது மிஷனரி விசுவாசிகளோடு அவர் வீட்டிற்குச் சென்று ஜெபித்தபோது சுகமாகி எழுந்து நடக்கிறதினால் முழு குடும்பமும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். சொப்னிலுக்கு ஜெபத்தினால் அரசாங்கத்தில் பொறியாளர் வேலை கிடைத்துள்ளது. வினோத்தின் உடைந்த எலும்புகள் விரைவில் ஒன்று சேர தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பனக்கேடா கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; திம்மர்கேடா கிராமத்தின் சந்திரபாலின் தொண்டையிலுள்ள கட்டி கரைய; குடித்துவிட்டு குடும்பத்தில் தகராறு செய்யும் பல்வீர் மனந்திரும்ப; கிராமங்களில் நடத்தவிருக்கும் குடியின் தீமை குறித்து விளக்க கூட்டம், எழுத்தறிவித்தல் பயிற்சி, மூப்பர்கள் கூடுகை ஆகியன ஆசீர்வாதமாக நடைபெற ஜெபிப்போம்.

நானக்மட்டா:

ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

துதிக்க: ஹரியா மற்றும் துல்டி கிராமங்களில் கிறிஸ்துமஸ் விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டன. பாலிகஞ்ச் மற்றும் பன்க்வாட் கிராமங்களில் புதிதாக நற்செய்தி பகிரப்பட்டது. நுரையீரல் மற்றும் சிறுநீரக பாதிப்பினால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த திவாடி கிராமத்தின் சோவீந்தர்சிங் ஜெபத்தினால் விரைவாக குணமடைந்து வீடு திரும்பினதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஹரியா கிராமத்தின் விசுவாசி மனீஷ் தன்னுடைய கரும்பு தோட்டத்தில் நல்ல விளைச்சல் பெற; அவருடைய இருதய வியாதி நீங்க; ஆலயம் வந்து ஜெபிக்கும் பல்வீந்த் கௌரின் ஜெபம் கேட்கப்பட; ஜஸ்வீர்சிங் வெளிநாட்டுக்குப் போக நிலவும் தடைகள் நீங்க; திவடி கிராமத்தின் நிஷா சுவாச கோளாறிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. துரைசாமி K. ஃபிரான்சிஸ்
திரு. பிரசாந்த் மீசாலா
திருமதி. பத்மாவதி நாராயண நாயக்
திருமதி. தனபுஷ்பம் அருள்ராஜ்
செல்வி. ஹெலன் மரியம் R.

கிச்சா: பிபாபா பானி & பித்திகா

துதிக்க: புதிதாக துவங்கப்பட்டுள்ள இந்த பணித்தளத்திற்காக மற்றும் இந்த தாலுகாவிலுள்ள 95 கிராமங்களைச் சந்திக்க தேவன் கொடுத்த நல்ல சந்தர்ப்பத்திற்காக; கிச்சா, சக்தி மற்றும் பாந்த் நகர் என்று மூன்று பூகோளப் பிரிவுகளாக இந்த பணித்தளம் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவதாக கிச்சா பகுதியில் அசோக் என்னும் தொடர்பாளர் கிடைத்துள்ளார். லால்பூர் மற்றும் ரத்தன்பூர் கிராம மக்கள் சுவிசேஷத்தை வாஞ்சையுடன் கேட்டுச் சென்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜான்கி குடும்பத்தில் காணப்படும் சுகவீனங்கள் மறைந்து தேவனண்டையில் அவர்கள் வர; குழந்தையில்லாத ராணிக்கு தேவன் ஜெபத்தினைக் கேட்டு குழந்தைச் செல்வம் அருளிச் செய்ய; நீண்ட நாட்களாக சுகவீனமாக இருக்கும் பாலாஜியின் மகன் சுகமடைய; உத்தராகண்ட் மாநிலத்தில் பரவலாக நிலவும் எதிர்ப்புகள், கிறிஸ்தவர்கள் மீதுள்ள வெறுப்புகள் மறைய ஜெபிப்போம்.

டெல்லி

பட்பர்கன்ஜ்:

ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்

துதிக்க: கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகளாக சிறுவர் வேத வினா போட்டி, குடும்பப் பாடல் போட்டி போன்றவைகள் திரிலோக்புரி ஆலயத்தில் நடைபெற்றன. ஹோடல் பகுதியில் சிறுவர்களுக்கான இரண்டு நாள் முகாம் நடைபெற்றது. ரோகினி செக்டாரில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களை நமது வாலிபக் குழு சென்று சந்தித்து கிறஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தி அவர்களுக்காக ஜெபித்து வந்தனர். 30 மற்றும் எக்ஸ்ட்ரா 30 செக்டாரிலுள்ள வீடுகள் தோறும் சென்று கிறிஸ்துமஸ் வாழ்த்து சொல்ல தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கல்யான்புரி பகுதியிலுள்ள அபிஷேக் கண் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு அவதியுறுகிறார். அவர் முற்றிலும் குணமடைய; 29 லேபர் காலனியின் ரோஷன் குடிப்பழக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட; நொய்டாவின் சிம்ரன் அழகான குழந்தையை ஈன்றெடுக்கவும், திரிலோக்புரியின் ரவி-எலிசபெத், சந்தோஷ்-சுசீலா, நொய்டாவின் அபிசேக்-ஆஷா குழந்தை செல்வங்களினால் ஆசீர்வதிக்கப்படவும், திரிலோக்புரியின் விசுவாசிகள் உற்சாகமாக வெளிப்புற நற்செய்தி அறிவித்தலில் பங்குப் பெறவும் ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சிபி செல்வின் சாம்
திருமதி. கவித் சுனிதாபேன் ரஷ்யாபாய்
திருமதி. ரேகா சாம்பியா

ராஜஸ்தான்

உதய்பூர்:

ஆஷிஷ் குமார் & சவிதா தேவி

துதிக்க: 15 நபர்கள் கிறிஸ்து இயேசு மீதுள்ள தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்தனர். 5 கிராமங்களில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் விழாக்களில் ஏராளமானோர் பங்கு பெற்று நற்செய்தி கேட்டுச் சென்றனர். எந்தவித தொந்தரவுமின்றி கிறிஸ்துமஸ் கீத பவனி மற்றும் கீத ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. 3 இடங்களில் விசுவாசிகளுக்கு புது வருட சிறப்பு அர்ப்பணிப்பு ஆராதனைகள் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: திருமணமாகி ஏழு வருடங்களாகியும் குழந்தை பாக்கியம் அடையாமல் இருக்கிற புதிதாக ஆலயம் வருகிற கமல் மற்றும் லக்ஷ்மண் குடும்பங்களுக்காக; திடீரென பார்வைத் திறனை இழந்திருக்கிற ராஜு அதனை திரும்பப் பெற; கமலா மற்றும் ஹென்னா பிசாசின் பிடியிலிருந்து விடுபட; இந்த புதிய வருடத்தில் கோகுன்டா தாலுகாவில் ஊழிய வாய்ப்புகளை தேவன் உருவாக்கித் தர ஜெபிப்போம்.

கேர்வாடா:

போயா தேவுபாய் & ஜாமுபேன், தாங்பியாக்முவான், கெனோஸ் ஸ்டான்லி இன்பராஜ், தேபாஷிஸ் ஹெம்ப்ராம் & ஷெஃபாலி ஹன்ஸ்தா

துதிக்க: ஒன்பது நபர்கள் தேவ அன்பினை ருசித்து தங்களை அவரின் மந்தைக்குள் இணைத்துக்கொண்டனர். சிறுநீர் கழிக்க முடியாமல் அவதியுற்ற கீர்த்தன் ஜெபத்திற்கு பிறகு நல்ல படியாக சிறுநீர் கழிக்கவும், காச நோயினால் கஷ்டப்பட்ட பினாபேன் நோயின் தாக்கத்திலிருந்து சற்று குண மடையவும், அடிக்கடி வலிப்பு வந்து துன்பப்பட்ட சுனில் சுகமடையவும் தேவன் உதவினார். கிறிஸ்துமஸ் கால விழாக்கள், ஆராதனைகள் தேர்தல் சமயத்திலும் இடையூறின்றி நடந்தேற தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆலயம் கட்ட அனுதி கேட்டு பஞ்சாயத்து அலுவலகத்தில் மனு கொடுக்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் அனுமதி கொடுக்காமல் மறுத்து வருகின்ற அலுவர்கள் மனம் மாற; மகன் அய்யூப்பை இழக்கக்கொடுத் துள்ள தினேஷ்பாய் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; நுரையீரல் நீர்கட்டி யினால் அவதிப்படுகின்ற சந்துபாய் குணமடைய; நனோடா மற்றும் கலோந்தர் கிராமங்களில் ஆராதனை குழுக்கள் ஆரம்பிக்க சாதகமான சூழ்நிலைகள் நிலவ ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஜெசிந்த் ஜோவன்னா ராமமுனி பிரசாத்
திருமதி. தீனா குமாரி பெபர்த்தா ஆஷாபிராட்தா
திருமதி. துர்கா தேவி @ ரூத் மேரி சங்கர் A.

ஹனுமான்கட்:

முதவத்து ராஜு நாயக் &
புக்கியா ஜான்சிபாய்

துதிக்க: ஏழு இடங்களில் கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகள் எந்தவொரு இடையூறுமின்றி நடந்தேற கர்த்தர் கிருபை செய்தார். அநேக புற மதத்தினர் நின்று கிறிஸ்து பிறப்பின் செய்தியினை கேட்டுச் சென்றனர். 3 இடங்களில் நடத்தப்பட்ட வேத ஆராய்ச்சி வகுப்புகளில் அதிக அளவில் விசுவாசிகள் கலந்துகொண்டு ஆசீர்வாதம் பெற்றனர். ஹாஹாகர் கிராமம் சுவிசேஷத்தினால் புதிதாக சந்திக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மனப்பிறழ்வு ஏற்பட்டுள்ள சுரேந்தர்சிங் குணமடைய; தன் தாயை இழந்திருக்கும் ஜெக்வீர்சிங்கின் ஆறுதலுக்காக; கிறிஸ்துமஸ் காலங்களில் சுவிசேஷம் கேட்டவர்கள், கைப்பிரதிகள் வாங்கிச் சென்றவர்கள் அதனை படித்து உண்மை தெய்வத்தை அறிந்துகொள்ள; சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ள புதிய கிராமமான ஹாஹாகரின் ஜனங்கள் தேவனை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

உத்தரப் பிரதேசம்

சிக்கந்ரா:

பச்சியாபாய் போஹ்னாபாய் &
சவிதாபேன்

துதிக்க: விசுவாசிகளின் தொடர் ஜெபத்தினால் முங்கீஸ்பூர் கிராமத்தின் ஜூலிக்கு திருமணமாகி 13 வருடங்களுக்குபின் குழந்தை பாக்கியம் தேவன் ஈந்துள்ளார். புதிதாக இந்த பணித்தளத்தை பொறுப்பெடுக்கவும், அங்கு தங்கி பணியாற்ற நல்லதொருவீடு கிடைக்கவும் தேவன் கிருபை செய்தார். சிக்கந்ராவில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெரு விழாவிற்கு மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவரும் மாவட்ட காவல்துறை தலைவரும் வந்திருந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தனர். பள்ளிக்குச் செல்லும் வழியில் பிரிய தர்சினியை பெரிய விபத்திலிருந்து தேவன் பாதுகாத்தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்தவர்களுக்கு எதிராக அடிக்கடி பரவுகின்ற வதந்திகளுக்கு பயப்படுகின்ற விசுவாசிகள் திடமாக நிற்க; வரும் நாட்களில் திட்டமிடப்பட்டிருக்கின்ற நற்செய்தி பகிர்வு நிகழ்ச்சி, ஆவிக்குரிய வளர்ச்சிப் பயிற்சி ஆகியன நல்ல படியாக நடக்கவும், புறமதத்தினர் நற்செய்தி பிரதிகளை வாங்கி வாசித்து புரிந்துகொள்ளவும், விசுவாசிகள் திரளாக பங்குபெறவும், தர்மேந்திராவின் அறுவை சிகிச்சை செய்யபட்ட காயங்கள் சீக்கிரம் குணமாகவும் ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சாலமோன் A.

ஜின்ஜக்:

சமரேந்திர சிங் & சுஸ்மித்தா

துதிக்க: நான்கு நபர்கள் தங்களது விசுவாச அறிக்கையை வெளிப்படையாக செய்து கர்த்தரின் மந்தைக்குள் இணைந்தனர். 7 இடங்களில் கொண்டாடப்பட்ட கிறிஸ்துமஸ் பெரு விழாக்களில் சுமார் 2000 பேருக்கு சுவிசேஷம் பகிர தேவன் வாய்ப்பு தந்தார். 10 நபர்கள் புதிதாக விசுவாசத்திற்குள் வந்து தேடுவோர் முகாமில் கலந்துகொண்டனர். ஹார்மோலி மற்றும் சுஜாம்பூர் கிராமங்களில் சுவிசேஷம் புதிதாக பறைசாற்ற தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பார்வை குறைபாட்டினால் படிக்க முடியாமல் தடுமாறும் 19 வயது வாலிப பெண் சாந்தி குணமடைய; நமது சபை வாலிபர்களான பிப்பின், ஜித்து, ஆஷிஷ், அகிலேஷ் மற்றும் ரஜத் இவர்களுக்கு நல்ல வேலை கிடைக்க; பகதூர்பூர், முபாரக்பூர், பாடுவால் கிராமங்களிலுள்ள விசுவாசத்தில் பின்வாங்கியுள்ள நபர்கள் மீண்டும் தேவனின் மந்தைக்குள் வர; சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள புதிய இரண்டு கிராமங்களிலும் விரைவில் ஆராதனை குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

கான்பூர் பிராந்தியம்:

மாங்வெய் ஃபோம் & நிஷா

துதிக்க: இந்த கிறிஸ்துமஸ் மற்றும் புதுவருட பிறப்பு கொண்டாட்ட காலங்களில் பிராந்தியத்தில் பணியாற்றும் 29 மிஷனரிகளையும், 29 சுதேச ஊழியர்களையும், 5 தன்னார்வலர்களையும் சபை விசுவாசிகளையும் தேவன்தாமே பாதுகாத்தார். 4 நபர்கள் தேவனுக்கென ஆத்தும ஆதாயம் செய்யப்பட்டனர். 43 இடங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவில் சுமார் 8500 நபர்கள் கலந்துகொண்டு தேவ செய்தி கேட்டுச் சென்றனர். மிஷனரி ஷீபா தன் குழந்தைகளுடன் வாகனத்தில் சென்றுகொண்டிருந்த போது வாகனம் விபத்துக்குள்ளாகி எந்தவொரு சேதமுமின்றி கர்த்தரால் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பஹுவா பணித்தளத்தில் ஊழியர் ஜெய்லால் மற்றும் 3 மூப்பர்களுக்கு எதிரான வழக்கு, பர்தானா பணித்தளத்தில் ஊழியர் ஷியாம் சுந்தர் மற்றும் வைசாலி ஆலயம் மீது போடப்பட்டுள்ள வழக்கு, கோண்டா விடுதி நிலம் சம்பந்தப்பட்ட வழக்கு இவைகள் விரைவில் நல்ல முறையில் முடிவுக்கு வர; பஸ்தி பணித்தளத்தில் நமது ஊழியர்களான கமல் மற்றும் அமித்குமாரை மிரட்டி வரும் காவல் துறையினர் மனந்திரும்ப; விடுதியில் 12-ம் வகுப்பு படித்துவரும் மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த; பொறியியல் நுழைவுத்தேர்வுக்கு தயாராகி வரும் விடுதி மாணவன் கோபாலுக்கு தேவன் விசேஷ ஞானம் அருள ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பினயகுமார் குரு

மத்தியப் பிரதேசம்

நிவாலி:

சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி

துதிக்க: 9 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசித்து அவரின் மந்தைக்குள் வந்துள்ளனர். ரெவாஜாய், பத்கான், மோகாரிகேடா, சட்டாலி, தான்டுவாடா கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டபோது 163 நபர்கள் கேட்டு சுவிசேஷப் பிரதிகள் வாங்கிச் சென்றுள்ளனர். கோல்யாபானி கிராமத்தில் நடத்தப்பட்ட ஆலய நிர்வாக கமிட்டி கூட்டமும், பெண்கள் சிறப்பு கூடுகையும் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: திட்டமிடப்பட்டிருக்கின்ற கிறிஸ்துவை அறிவிக்கும் நிகழ்ச்சி தடையின்றி நடைபெற; கட்டிமுடிக்கப் பட்டிருக்கின்ற கோல்யாபானி ஆலய மங்கலப்படைப்பு எந்தவொரு தடையுமின்றி சிறப்பாக நடந்தேற; இயேசு திரைப்படம் மற்றும் பெண்கள் கூடுகை சிறப்பாக நடக்க ஜெபிப்போம்.

டப்ரா: சத்திகந்த் பரிச்சா & சகரிகா

துதிக்க: விசுவாசத்தில் பின்வாங்கியிருந்த ஹர்சன்சிங் மீண்டும் மனந்திரும்பி ஆலயம் வர ஆரம்பித்துள்ளார். அதிக எதிர்ப்புள்ள கௌசல்யாபூர் கிராமத்தில் இயேசுத்திரைப்படம் திரையிடப்பட்டு அநேகர் பொறுமையாக பார்த்துச் சென்றனர். புதிய விசுவாசிகள் உற்சாகத்துடன் கலந்துக்கொண்ட; கிறிஸ்துமஸ் கீத பவனி எல்லா கிராமங்களிலும் விமரிசையாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பிலால்பூர் உப மையத்தில் தங்கி ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள ஊழியர் கிடைக்க; நாம்கிசால் கிராம சபையினை ஆவிக்குரிய வழியில் நடத்திட சபை மூப்பருக்கு தேவையான பாரத்தை கர்த்தர் கொடுக்க; திவேஷ் காலு மற்றும் ஜார்டன்சிங் தங்கள் பாவ வழியினை விட்டு கர்த்தரிடத்தில் திரும்ப; பிரேம் நகர் ஆலயக்கட்டுமானப்பணி விரைவில் நல்ல படியாக முடிவடைய ஜெபிப்போம்.

பீஹார்

ராணிகன்ஜ்: தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி

துதிக்க: ஜகாத், கோபால்பூர் மற்றும் கோத்யாஹட் கிராமங்களில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாக்களில் பெருமளவில் மக்கள் கலந்து கொண்டனர். ஹிராபட்டி மற்றும் ஹிம்நகர் கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. இங்கு சில புதிய தொடர்பாளர்களை தேவன் தந்துள்ளார். குடும்பமாக ஜெபித்த நித்யானந்த் மன்டலுக்கு சொந்தமாக ஒரு ஆட்டோ ரிக்ஷா வாங்க தேவன் கிருபை செய்தார். இரு சக்கர வாகனத்தி லிருந்து கீழே விழுந்து காயம் அடைந்தி ருந்த ரன்ஜுதேவ் குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய விசுவாசிகளான அருண் ரிஷதேவ் முதுகு தண்டுவடப் பிரச்சினையில் குணமாகி நடக்கவும், சிவாவின் மகன் இனம்புரியாத நோயின் தாக்கத்தினால் எலும்பு பலவீனமடைவதிலிருந்து குண மடையவும், மாதவ்பூரா கிராம விசுவாசிகள் விசுவாசத்தில் பலப்படவும் தங்கள் இனத்தாருக்கு கிறிஸ்துவை அறிமுகம் செய்து வைக்கவும்; விசுவாசி ரவீந்தர் மண்டலுக்குத் தடையாக இருக்கும் அவரது மனைவி ரூபம் தேவி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜீவரத்ன பீரோ
திரு. ரோஞ்ஜய் நர்சாரி

அரரியா:

ஜென்னிஸ் & சுகந்தி புஷ்பம்

துதிக்க: நர்பாத்கஞ் பகுதியின் அசோக் ரிஷிதேவ் காசநோயின் வீரியத்திலிருந்து குணமடைந்து வருவதற்காக; மனோஜ் ரிஷிதேவ் எதிர்ப்புகளில் உறுதியாக நின்று மீண்டும் தன்னுடைய வீட்டை ஆராதனைக்கு திறந்து கொடுத்துள்ளார். புகையிலைப் போன்ற போதைவஸ்துகளுக்கு அடிமையாக இருந்த ஜித்தினி தேவி உபவாச ஜெபத்தின் மூலம் அதிலிருந்து மீண்டார். ராங்தா கிராமத்தில் கிறிஸ்துமஸ் விழாவின் தொடக்கத்தில் அதனை நிறுத்தச் சொல்லி எதிர்ப்பு தெரிவித்த இருவர் பிறகு அமைதியாகி, இறுதிவரை நின்று கவனித்துச் சென்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குடித்துவிட்டு தன் மனைவியை அடிக்கும் சலேன் ரிஷிதேவ் மனந்திரும்ப; நர்பாத்கஞ் கிராமத்தின் மகேஷின் குடும்பத்தில் நிலவுகிற பிரச்சினைகள் அகல; மீண்டுமாக அவர்கள் குடும்பமாக ஆலயம் வர; காஜ்வி சங்ராபூரில் நிலவும் அதீத எதிர்ப்புகளால் இங்கு திட்டமிடப்பட்டிருந்த இயேசுத்திரைப்படம் வீடு தோறும் நற்செய்தி ஆகியன ரத்து செய்யப்பட்டுள்ளன. இங்கு சுவிசேஷத்திற்கு வாசல்கள் திறக்கப்பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள பின்டு ரிஷிதேவ் மீண்டும் கிறிஸ்துவுக்குள் வர ஜெபிப்போம்.

ஜார்க்கண்ட்

தீன்பஹார்:

நெகேமியா & அனாமிகா பெகு

துதிக்க: கிறிஸ்துமஸ் விழாக்கள், விசுவாசிகள் அல்லாதோரும் கலந்து கொள்ள சிறப்பாக நடைபெற்றன. அநேக புற மதத்தினர் சுவிசேஷம் கேட்டுச் சென்றனர். மங்கரு முண்டாவின் வீடு பிரதிஷ்டை செய்யப்பட்டது. அங்கு குழுமியிருந்த ஊராருக்கு தேவ அன்பு மற்றும் கரிசனை பற்றி நற்செய்தி பகிர தேவன் கிருபை செய்தார். விசுவாசி கோபால் டோப்புக்கு வழக்காடு மன்றத்தில் அரசாங்க வேலை கிடைத்துள்ளது. புதுவருட வாக்குத்தத்த ஆராதனையில் அநேக விசுவாசிகள் கலந்துகொண்டு தேவனோடுள்ள உறவை மேம்படுத்த தீர்மானம் எடுத்துச் சென்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவை அறிக்கையிட்டு புதிதாக சபையில் சேர்ந்த டிட்டோரியா கெஜுர் கணவனை இழக்கக்கொடுத்துள்ளார். குடும்பத்தின் ஆறுதலுக்காகவும் விசுவாசத்தில் உறுதியாக தரித்திருக்கவும்; கிறிஸ்துவை அறிக்கையிட தயாராகும் கிரண் லக்ரா, பாட்டியா கிஷ்போடா, லீலா கஜுர், சுஜி கஜுர் இன்னும் கர்த்தரை ஆழமாக அறிந்துகொள்ளவும், அறிக்கையிடும் நிகழ்வு தடையின்றி நடைபெறவும், விசுவாசிகளுக்கு மிகுந்த உபத்திரவம் கொடுக்கும் நாராயண் முண்டா, துக்கா மின்ஸ், தர்மா காக்கா, சங்கர்வா மினஸ் ஆகியோர் மனந்திரும்ப; நீண்ட வருடங்களுக்கு பிறகு கர்ப்பம் தரித்திருக்கும் அசோக் முண்டாவின் மனைவியின் கர்ப்பம் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஸ்டெல்லா பிரபுதாஸ்
திரு. சஞ்சீப் குமார் ஆண்ட்ரப்
திருமதி. கம்புங் தாபா சுசாவ்
திருமதி. வயலட் ஹன்ஸ்தா
திருமதி. குர்பிரீத் கௌர் குல்தீப் சிங்

ஜகன்நாத்பூர்:

பாசுதேவ் மால்தோ &
பசந்தி, எஸ். ஆபிரகாம் &
ஆலிஸ் ஷீபா

துதிக்க: பத்து நபர்கள் கிறிஸ்துவின் அன்பினை ருசித்து அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டு அறிக்கையிட்டனர். கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகள் எந்தவொரு தடையுமின்றி சிறப்பாக நடைபெற்றன. புக்ரீப், குடாகட்டு, மட்காகட்டு, ஹடாச்பேரா, பொன்டியாரி ஆகிய இடங்களில் வெளிப்புற சுவிசேஷம் அறிவிக்கும் நிகழ்ச்சி மூலம் திரளானோருக்கு நற்செய்தி பகிரப்பட்டது. பாராஜம்தா சபையில் சபை மூப்பர்களுக்கு ஆத்தும ஆதாயப்பயிற்சி கொடுக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புருஜால்டி கிராமத்திலுள்ள நமது விசுவாசிகள் ஜெபித்துக்கொண்டிருக்கும் போது அவர்களை தாக்கி அவர்களில் இரு விதவைகள் மீது பொய் புகார் கொடுத்திருக்கும் எதிர்ப்பாளர்கள் மனந் திரும்பவும், ஜகநாத்பூர் வழக்கு மன்றத் திற்கு தங்கள் வேலையை விட்டுவிட்டு அலைந்துகொண்டிருக்கும் விதவைகள் மற்றும் மற்ற விசுவாசிகள் விசுவாசத்தில் பலப்பட; படப்பச்சயா மற்றும் கன்டிஜோரா கிராமங்களில் நடக்கவிருக்கிற கூடுகையில் கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் புது விசுவாசிகளுக்காக; கடக்கேசனா கிராமத்தில் நடக்கவிருக்கும் ஆத்தும ஆதாயப்பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

மண்ட்ரோ & பகையா மாணவர் விடுதி:

கென்னடி சிங் &
ஹயோஹம் லின்தோய்பி

துதிக்க: 20 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்து அவர் மந்தையில் இணைந்துள்ளனர். பாம்பு தீண்டி ஜெபத்திற்கு அழைத்துவரப்பட்ட ரோஷின் சோரேனின் ஜீவனை தேவன் பாதுகாத்தார். 5 இடங்களில் இயேசுத்திரைப்படம் திரையிட தேவன் கிருபை செய்தார். அனைத்து சிறுவர்களும் தங்களது அரையாண்டு தேர்வினை நல்ல முறையில் எழுதியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பீஹார் மாநிலத்தின் பாகல்பூர் மாவட்டம் சுவிசேஷத்திற்கு கதவுகளைத் திறக்கும்படியாக, விரைவில் அங்குள்ள பிர்பாண்டி கிராமத்தில் ஒரு ஆராதனைக்குழு துவங்கப்பட, சிறு ஜெபக்குழுக்கள் அனைத்து திருச் சபைகளிலும் கிரமமாக செயல்பட; எதிர்ப்பு தெரிவிக்கின்ற பாபுராம் ஹன்ஸ்தக் மற்றும் போனிபஸ் கிஸ்கு தேவனை ஏற்றுக்கொள்ள; 12-ம் வகுப்பு பொது தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருக்கிற மாணவர்கள் நல்ல உடல்நலத்துடன் இருக்கவும், பாடங்களை கவனம் சிதறாமல் படிக்கவும், மாணவர்களின் பாடங்களைப் புரிந்து கொள்ளும் அறிவு, விவேகம் ஆகியவைகள் தேவனால் அருளப்படவும் ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லால் நுன் மவி மார் கிக்கென்

பத்னா & பர்ஹர்வா சந்தால்

சிறுமியர் விடுதி:

பீட்டர் பிரபாகரன் & விமலா; வசாவா அருணாபேன், சிங் நய் சியான்

துதிக்க: மூன்று நபர்கள் கிறிஸ்துவை வெளிப்படையாக தங்கள் இரட்சகர் என்று அறிக்கையிட்டனர். தூக்கமின்மை வியாதியால் கஷ்டப்பட்டு தீராத தலைவலியுடன் சரியாக படிக்கமுடியாமலிருந்த பெடோ ஹெம்ரோம் என்ற சிறு பெண்ணை தேவன் குணப்படுத்தினார். கமாவ்பேரில் நிறுத்தப் பட்டிருந்த ஆராதனை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. எல்லா சபைகளிலும் அறுப்பின் பண்டிகை உற்சாகமாகக் கொண்டாடப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கோக்ரு கிராமத்தின் சைமன் ஹெம்ரோமின் ஆடு எதிர்ப்பாளர்கள் வைத்த விஷத்தினால் இறந்து போய்விட்டது. சைமனுக்கு நீதி கிடைக்கவும் எதிர்ப்பாளர்களை தேவன் சந்திக்கவும், இந்த மாதம் 12-ம் வகுப்பு பொது தேர்வு எழுதப்போகும் நமது விடுதி மாணவர்கள் நல்ல உடல் மற்றும் மன நலத்துடன் இருக்கவும் படிப்பில் கவனம் செலுத்தி தேர்வுகளை நல்ல முறையில் எழுதவும், மாணவர்களின் பெற்றோர் தங்களது பிள்ளைகளுக்காக தினமும் ஜெபிக்க முன்வர ஜெபிப்போம்.

மணிக்கா: வேதமாணிக்கம்

அப்பாதுரை & ஜெப தெபராள்

துதிக்க: கிறிஸ்துமஸ் விழாவின் போது நமது விசுவாசிகள் தங்கள் கிராமத்திலுள்ள எளியவர்களுக்கு சேலை, போர்வைக் கொடுத்து அன்பினை வெளிப்படுத்தினர். பேத்லா கிராமத்தின் விசுவாசி பூஜா குமாரிக்கு நல்ல மகனை தேவன் தந்தருளினார். கிறிஸ்துமஸ் விழாவின் போது சிறுவர்கள், வாலிபர்கள், பெண்கள் மற்றும் பெரியவர்கள் என்று அனைத்து தரப்பினரும் வேத வசனங்களை மனப்பாடம் செய்து ஒப்புவித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புத்தாவது வகுப்பு தேர்வு எழுதப் போகும் ஆஷா குமாரி மற்றும் கரிஷ்மா வுக்காக; தெத்தர்காட் கிராமத்திலுள்ள விதவை பன்பத்தியா பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற; பீஹாரா ஆலயக்கட்டுமானப் பணி விரைவில் நிறைவுற; விசுவாசத்தினை விட்டு பின்வாங்கியுள்ள தினேஷ், பல்லீ, அருண், சதன், அரவிந், பூதன், பிரிலேகா, ராகேஷ் மற்றும் கிருஷ்ணா ஆகிய ஓராவன் குடும்பங்கள் மீண்டும் அவரின் ஐக்கியத் திற்குள் வர ஜெபிப்போம்.

ஜெபம் என்னும் இரகசிய ஆயுதம்

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பெயிண்ட் பணித்தளத்தில் மோட்டி பால்சன் கிராமத்தில் கட்டப்பட்டிருந்த ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்து முடித்து காலை 2.30 மணியளவில் நமது ஊழியர் அலெக்ஸ் மற்றும் அவரின் குடும்பம் ஒரு ஆம்னி காரில் வீடு திரும்பிக்கொண்டிருக்கும்போது சிறு குன்றுகளின் திருப்பத்தில் எதிரே வந்த வாகனம் மீது நேரடியாக மோத வேண்டிய சூழ்நிலையில், வண்டியின் ஓட்டுநர் சற்று வண்டியை வேகமாக திருப்பியதால் வாகனம் நிலை தடுமாறி சில வினாடிகளுக்குள் சரியான நிலைக்கு வந்து நின்றது. அன்று 4 மணிக்கு தங்கள் வீட்டை சென்றடைந்தனர். சென்னை கொரட்டூர் பகுதி நமது கௌரவ விரிவுப்பணி செயலர் திரு. சக்திவேல் அண்ணன் அவர்கள் நமது மிஷனரி அலெக்ஸ் குடும்பத்தை தாங்கி வருபவர். இவர் அன்றிரவு முழுஇரவு ஜெபத்தில் தரித்திருந்த போது விடியற்காலை 2.30 மணியளவில் தனது மிஷனரியின் பாதுகாப்பிற்காக ஜெபிக்கும்படி தேவனால் உந்தப்பட்டார். மறுநாள் காலை நமது மிஷனரியோடு தொடர்பு கொண்டபோது தேவன் அருளிய அற்புதமான பாதுகாப்பை அறிந்து தேவனைத் துதித்தார். நம் ஜெபம் பல மாநிலங்களை கடந்து சென்று கிரியை நடப்பிக்கும் வல்லமையான ஆயுதம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. டேனியல் தாமஸ்
திருமதி. மெர்சி தெபோரா செந்தில்
திரு. வசாவா எலேஷ் பிரபு
திரு. அய்யனார் M.

மேற்கு வங்காளம்

பாலுர்காட்: ஆர். கிங்ஸ்லி
லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

துதிக்க: நக்டாகர் ஆலயம் தேவநாம மகிமைக்கென மங்கலப்படைப்பு செய்யப் பட்டது. 4 இடங்களில் கிறிஸ்துமஸ் ஆராதனை விழாக்கள் நடைபெற்றபோது சுமார் 150 பேருக்கு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. போன்கட் கிராம சபை பெண்கள் மத்தியில் தொடர்ந்து நடந்துவரும் வேதாகம வகுப்புகளுக்கு அதிக அளவில் பெண்கள் வந்து கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவை அறிக்கையிட தயாராகும் புல்முனி சோரேன், ரோஷன் ஹெம்ரோம், பர்தி மார்டி, சுபாஜித் ஹெம்ரோம், சரோஜித் ஹம்ரோம் குடும்பங்கள் கிறிஸ்துவின் விசுவாசத்தில் மேலும் வளர; போன்கட் கிராமத்தின் பெண்களைப் போன்று தான்தகர், கோசாபூர், ஹரிபூர் மற்றும் கட்னா கிரா சபைகளிலும் பெண்கள் வேதாகம வகுப்புகள் ஆரம்பிக்கப்படவும் விசுவாசிகள் ஆர்வத்துடன் பங்குபெறவும்; வருகின்ற மூப்பர் பயிற்சி முகாம், வாலிபர்கள் கூடுகை போன்றவை நல்ல பலன்களைத் தர ஜெபிப்போம்.

ஜாம்போனி:

இப்ராயிம் மாலி & புரோசன்சிதா

துதிக்க: இரண்டு நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். பிசாசின் பிடியிலிருந்த கௌசல்யா மூர்மு தொடர் ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட்டார். கிறிஸ்துமஸ் பெருவிழாவின்போது பெரிய அளவில் நற்செய்தி அறிவிக்கத் திட்டமிடப்பட்டு, விழாக்கள் நடைபெற்ற 18 இடங்களிலும், அங்கு வந்திருந்த அனைவருக்கும் நற்செய்தி கைப் பிரதிகள் வழங்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிதாக நற்செய்தியினால் சந்திக்கப்பட்டுள்ள கட்குரா மற்றும் சல்கா பனாசர் கிராமங்களில் தேவ ஆவியானவர் கிரியை செய்யவும், விரைவில் ஆராதனைக் குழுக்கள் இங்கு ஆரம்பிக்கப்படவும், ராம்நகரில் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டும் கடோன்மி சோரேன், சட்யூரி சோரேன், சம்கரி மார்டி மற்றும் ஹவ்டி மார்டி இன்னும் அதிகமாக தேவனை அறிந்துகொள்ளவும் அவரை அறிக்கை செய்யவும் ஜெபிப்போம்.

நவீனகால சவுல்

ஒடிசா மாநிலத்தில் ருமாலி பணித்தளத்திலுள்ளது அர்சோல் கிராமம். இங்குள்ள நமது விசுவாசிகள் அமைதியாக கர்த்தரை ஆராதித்து வந்தனர். வருடாவருடம் விசுவாசிகளின் எண்ணிக்கைப் பெருகி வருவதால் கோபமடைந்த குருபாரி என்பவரின் மாமனார் நமது ஊழியத்திற்கு அதிக தொந்தரவுகளைக் கொடுத்து வந்தார். அடிக்கடி பொய் புகார் மனுக்களை அனுப்பி வந்தார். அவருக்காக நமது விசுவாசிகள் தொடர்ந்து ஜெபித்து வந்தனர். திடீரென ஆலயத்திற்கு வந்தவர், முந்தினநாள் இரவிலே இயேசுகிறிஸ்து தமக்கு காட்சித் தந்ததாகவும் அவரே உண்மை தெய்வம் என்று உணர்ந்து கொண்டதாகவும் கூறி அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தார். தற்போது தினமும் காலை மற்றும் மாலை ஆலயம் வரும் அவர் பாடல்கள் பாடி ஜெபித்துச் செல்கிறார். தேவ நாமத்திற்கே மகிமை!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பொன்லதா ஜெபக்குமார்
திரு. சதீஷ் குமார் C.

தபன்: ஹரமோகன் & சூசம்மா

துதிக்க: ஐந்து நபர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு விசுவாச அறிக்கை செய்தனர். தக்தகார் தேவாலயம் மங்கலப்படைப்பு செய்யப்பட்டது. நக்தகார், பஸ்பாடா, மோகன் தாரா மற்றும் நெம்பா மையங்களில் கிறிஸ்துமஸ் பெருவிழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. சுமார் 800 பேருக்கு இந்த விழாக்காலத்தில் சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. மஞ்சள்காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் பலவீனமாக இருந்த பிஸ்து முர்மு ஜெபத்தினால் சுகமானதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மனநோயினால் பாதிக்கப் பட்டிருந்த மோகன் ஹெம்ரோம் ஜெபத் தினால் சுகமாகி கிறிஸ்துவின் சீஷராயினார். சில நாட்களுக்குப்பின் மறுபடியும் மனநோய் தாக்கவே, உறவினர்கள் நீ கிறிஸ்தவ ஆலயத்திற்குச் சென்றதனால் வந்தவினை என்றுக்கூறி அவரை அடித்து காலை கட்டிப்போட்டு கஷ்டப்படுத்தப்படும் அவருக்காக; தங்களுடைய சிறு குழந்தையை இழக்கக்கொடுத்துள்ள நுருல் குடும்பத்தின் ஆறுதலுக்காக ஜெபிப்போம்.

மேற்கு வங்காள சந்தால் பிராந்தியம்: சாலமோன் ஏ & சுகந்தி

துதிக்க: 27 நபர்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பிராந்தியத்தில் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் விழாக்களில் சுமார் 7350 நபர்கள் கலந்துகொண்டு நற்செய்தி யைக் கேட்டுச் சென்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சம்சி பணித்தளத்தில் ஜீட்தால் பூர் பகுதிகளில் நமது ஊழியர்களை ஊருக்குள் விடாமல் தடைசெய்யும் நபர்கள் கிறிஸ்துவால் சந்திக்கப்பட; கரன்டிகை பணித்தளத்தில் புதிதாக விசுவாசத்திற்குள் வந்திருக்கும் மனோஜ் டுடு, சோர்தார் ஹெம்ரோம் குடும்பங்களை மிரட்டிவரும் நபர்கள் மனந்திரும்ப; சிங்கியா, டோயா டோலா, கெசாம்பூர், பெட்காசா கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் துவங்க நாம் எடுக்கும் முயற்சிகள் பலளிக்க ஜெபிப்போம்.

சம்சி: தீப் ரத்னா & மித்லேஷ்

துதிக்க: இரு நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள்ளாக வந்துள்ளனர். புது விசுவாசி சிவா சரண் பல்வேறு நோய் களினால் பாதிக்கப்பட்டு நடக்கவியலாம லிருந்த நிலையில் ஜெபத்தினால் அனைத்து வியாதிகளிலிருந்தும் சுகம் பெற்றார். 8 இடங்களில் திரையிடப்பட்ட இயேசுத் திரைப்படத்தை சுமார் 800 பேர் பார்த்தும் சுவிசேஷ கைப்பிரதிகள் வாங்கியும் சென்றுள்ளனர். வாரி மற்றும் ரோனா கிராமங்களில் கிறிஸ்துமஸ் விழா சிறப்பாக நடத்திட தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கால் வளைந்தும் வீங்கியும் காணப்படுகிற ராகேஷ் முர்மு சுகமடைய; பக்கவாதத்தினால் அவதியுறுகிற பிஸ்நாத் சோரோன் விரைவில் பூரண குணமடைய; சித்தால்பூர் பகுதியில் சுவிசேஷத்திற்கு அடைக்கப்பட்டுள்ள கதவுகள் திறக்கப்பட; பட்காரா கிராமத்தின் அர்ஜுன் முர்மு, கோன்டாலா கிராம டாலு ஹன்ஸ்தா ஆகியோர் இன்னும் அதிகமாக தேவனை அறிந்துகொள்ள, அவரை அறிக்கை செய்ய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ருஹாமா குரு
செல்வி. வன்கலபுடி சாந்தினி

பாக்குவாஹாட்:

ராமகிருஷ்ண அகிபாடா &
அஞ்சலி தேவி

துதிக்க: டாலிகோட்டு கிராமத்தின் மித்தின் மூர்மு பிசாசின் தாக்குதலுக்குள்ளாகி 3 நாட்களாக சாப்பிடாமல், தூங்காமலிருந்து வந்த நிலையில் ஆலயம் அழைத்துவந்து ஜெபித்தபோது உடனே அசுத்த ஆவி ஓடிவிட தற்போது நல்ல நிலையில் உளளார். தேவன் நல்ல விளைச்சலை விசுவாசிகளின் நிலத்தில் தந்துள்ளதால் நீம்டங்கா, சல்பனா மற்றும் உலாத்தூர் சபைகளில் அறுப்பின் பண்டிகை உற்சாகமாக கொண்டாடப்பட்டது. மானிக்பூர் மற்றும் சப்பனா கிராம பகுதிகளில் கிறிஸ்துமஸ் கீத பவனியின் போது அனைவருடைய வீடுகளுக்கும் சென்று வாழ்த்து கூறப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுஜோன் ஹெம்ரோம் குடும்பத்தில் நிலவும் பிரச்சினைகள் நீங்கி சமாதானம் உண்டாக; பாக்குவாஹாட் பணித்தளத்தில் ஒராவன் இனத்திலிருந்து முதலாவதாக கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மோக்கன் ஒராவன் சாட்சியுள்ள வாழ்வு வாழவும், இதன் மூலம் மற்றவர்களும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை குறித்து அறிந்துகொள்ள முன்வரவும்; நமது ஊழியத்திற்கு எதிராக செயல்படும் ஆதிவாசி செங்கால் அபியான் குழுவினர் கிறிஸ்துவின் அன்பினை உணர்ந்துக்கொள்ள ஜெபிப்போம்.

அஸோம்

ஜோனை:

சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா

துதிக்க: இரண்டு நபர்கள் கிறிஸ்துவை அறிக்கையிட்டு தங்களை அவர் மந்தையில் இணைத்துக்கொண்டனர். லெய்மிக்குரி கிராமத்தில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் பெருவிழாவின்போது திரளான மக்கள் கூடி நிகழ்ச்சியினைக் கண்டுச் சென்றனர். எதிர்ப்பு காணப்பட்ட போராங் கிராமத்தில் தடையின்றி சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டது. பிசாசின் பிடியில் சிக்கி பக்கவாதம் வந்து நடக்க முடியாமலிருந்த சிவானந்த் பெகு தொடர் ஜெபத்தினால் கட்டுகள் அறுபட்டு நடக்க ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: லெய்மிக்குரி கிராமத்தில் எதிர்ப்பினால் நிறுத்தப்பட்டுள்ள ஆலயக்கட்டுமானப்பணி மீண்டும் தொடங்கப்படவும் எதிர்ப்பு தெரிவிக்கும் தால்முல் தொலேய் மனந்திரும்பவும்; சபை மூப்பர்களான ரகேஷ் தொலேய், திம்பேஸ்வரி தொலேய், போர்பட்டி தொலேய், பிரசாந்த் தொலேய் மற்றும் கோலிமான் பெஹு தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு சபைகளை நடத்த; இந்த வருட மார்ச் மாதத்திற்குள் மூன்று ஆராதனைக் குழுக்கள் உருவாக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. தேஜஸ்விட்டா பெபர்த்தா, திரு. சுகின்லால் C.

சத்தீஸ்கட்

துர்கொண்டல்:

பாபுஜி முர்மு & வயலட் ஹன்ஸ்தா

துதிக்க: 5 நபர்கள் கிறிஸ்துமீதுள்ள தங்கள் விசுவாசத்தை வெளிப்படையாக அறிக்கை செய்தனர். ஹலான்ஜார் கிராமத்தில் முதன்முறையாக இந்த வைபவம் நடைபெற தேவன் கிருபை செய்தார். 137 நபர்களுக்கு நற்செய்தி பிரதிகள் கொடுக்கப்பட்டன. நீண்ட நாட்களாக சுகவீனமாக இருந்த பாபுஜி குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய விசுவாசிகளான பிரகாஷ் கின்டோ மற்றும் புல்மாட்டி கின்டோ தங்களது உடல் பலவீனம் மற்றும் தீராத வயிற்று பிரச்சினையிலிருந்து சுகமடைய; மடியா இனமக்கள் மத்தியில் நல்லதொரு எழுப்புதல் ஏற்பட; ஹலான்ஜார் கிராமத்தில் விசுவாசிகளின் இனத்தார் கிறிஸ்துவை அறிந்துகொள்ளும் வண்ணம் நமது புதிய விசுவாசிகள் தங்கள் வாழ்வினை சாட்சியாக வாழ ஜெபிப்போம்.

சீத்தாபூர்:

முத்துக்குமார் & நேத்ரவதி

துதிக்க: தொடர்ந்து கைப்பேசியில் விளையாடிக்கொண்டு இருந்ததினாலும், போதைப்பொருளை உபயோகித்ததினாலும் மனநலம் பாதிக்கப்பட்டிருந்த சவார்பாடா கிராமத்தின் அதுல் என்கிற வாலிபன் ஜெபத்திற்கு பிறகு நல்ல நிலைக்கு திரும்பியுள்ளான். இரவு நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட கிறிஸ்துமஸ் கீத பவனி எந்தவொரு உபத்திரவமுமின்றி சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்தார். இந்த விழாக் காலங்களில் 11 கிராமங்களில் வெளிப்புற கூட்டங்கள் மூலமாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிறிஸ்துவை அறிய ஆர்வம் காட்டும் மனோஜ் கேஷ், நிபேகர் டொப்போ மற்றும் விக்ரம் லக்ரா ஆகியோர் விசுவாசத்தில் பலப்பட; குடும்பப் பிரச்சினை காரணமாக மனஅமுத்தத்திலிருக்கும் சீமா, க்யான்தீப் மற்றும் பல்சாய் பிரச்சினையிலிருந்து வெளிவந்து சமாதான வாழ்வு வாழ; சுவிசேஷத்தினால் சந்திக்கப்படவுள்ள புதிய கிராமங்களில் விதைக்கப்பட்ட தேவ வசனங்கள் நல்ல பலனைத் தர; பர்பஹலா, கல்ஜீபா, தாராய் டன்ட் ஆகிய இடங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆலயக்கட்டுமானப்பணிகள் விரைவில் நல்ல முறையில் நிறைவேற ஜெபிப்போம்.

பையாதன் – 1:

தாங் சின் லியான் & உங் தியான்சிங்

துதிக்க: ஜன்சி கிராமத்தில் திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்தை திரளானோர் பார்த்துச் சென்றனர். மூன்று கிராமங்களில் புதிதாக நற்செய்தி பகிரப்பட்டுள்ளது. கிறிஸ்துமஸ் பெருவிழா கொண்டாட்டத்தின் போது தேவையுள்ள கிராம மக்களுக்கு கம்பளி வழங்கப்பட்டது. வருட இறுதி துதி ஸ்தோத்திரக் கூட்டம் அநேக விசுவாசிகள் கூடிவர சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குழந்தை பாக்கியத்திற்காக நீண்ட வருடங்களாக ஜெபித்துக்கொண்டிருக்கும் கப்பா கிராமத்தின் புஷ்பாவின் ஜெபத்திற்கு பதில் கிடைக்க; நிஹா மற்றும் சந்தோஷி சகோதரிகளின் கர்ப்பத்தின் கனியினை தேவன் ஆசீர்வதிக்க; விஷ்ணு தன்னுடைய குடிப்பழக்கத்தினின்று விடுதலையாக; இந்த புது வருடத்தில் திட்டமிடப்பட்டிருக்கிற நிகழ்ச்சிகள் தடையின்றி நடைபெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. அன்புமலர் பாலமுருகன்

ஒடிசா

உத்கல் பிராந்தியம்:

அசோக் நாயக் & சுரபி

துதிக்க: சுவிசேஷம் 8 கிராமங்களுக்கு புதிதாக பறைசாற்றப்பட்டிருக்கிறது. 4 குடும்பங்கள் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். மங்காஷ்பூரா, பிம்புடியா மற்றும் அம்பாசரா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு காணப்படும் நல்ல வரவேற்பிற்காக; ரைசம் கிராமத்தில் பிசாசு பிடித்த நபருக்கு நடத்தப்பட்ட உபவாச ஜெப வேளையில் அந்த நபரின் உடம்பிலிருந்து அநேக பிசாசுகள் ஓடி அந்த நபர் விடுதலை அடைந்து கிறிஸ்துவின் சீஷராகமாறியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள 10 குடும்பங்கள் விரைவில் தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்ய; சுவிசேஷத்திற்கு உற்சாகம் காட்டும் கிராம மக்கள் மத்தியில் ஆராதனைக் குழுக்கள் உருவாக; இந்த புதிய வருடத்தில் சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்களோடு சேர்ந்து இலக்குகள் வைத்து செயல்பட்டு அநேக ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய தேவன் எங்களுக்கு பெலன் தர ஜெபிப்போம்.

ஜஷிப்பூர்: சாமுவேல் ஜே. & ஹவிலா பரமானந்த், அரவிந்த் குமார் & ஹெலன் மரியம்

துதிக்க: 15 கிராமங்களில் திரையிடப்பட்ட இயேசுத்திரைப்படத்தை அநேகர் நின்று இறுதிவரை பார்த்துச் சென்றனர். 337 நபர்கள் சுவிசேஷ கைப்பிரதிகள் வாங்கிச் சென்றுள்ளனர். பாராக்முன்டா கிராமத்தில் சாந்தி புர்டி சாத்தானின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதினால் முழுக்குடும்பமும் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷ கைப்பிரதிகள் வாங்கிச் சென்றுள்ள 337 நபர்களும் வேத வசனத்தால் தொடப்படவும், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும், கன்டுபில் கிராமத்திலுள்ள விசுவாசிகள் குடிதண்ணீரைத் தேடி நீண்ட தூரம் போக வேண்டி இருப்பதினால் ஆலயம் வருவதில் சிரமமாக இருக்கிறது. அவர்களது குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட; திருமணமாகி நீண்டவருடங்களாக குழந்தையின்றி இருக்கும் தாமுபர்ஜோ, பிராப் பர்ஜோ, சிக்கூர்புர்டி மற்றும் மையா குடும்பங்கள் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

வெட்கப்பட்டுப் போவதில்லை

மகாராஷ்டிரா மாநிலம் ஜவஹர் பணித்தளத்தின் மாதவீரா கிராமத்தைச் சேர்ந்த நல்ல விசுவாசி சுரேஷ் ராவத். தன்னுடைய குடும்பத்தின் ஜீவாதாரத்திற்காக ஊரிலே ஒரு சிறு கடை வைத்து நடத்திவந்தார். கடைக்கு தேவையான பொருட்களை மொத்த விலையில் வாங்கினால்தான் ஊரிலே மக்களுக்கு குறைந்த விலையில் கொடுப்பதோடு ஓரளவு லாபமும் கிடைக்கும் என்பதினால் தொலைவிலுள்ள கான்வெல் போன்ற பெரிய ஊர்களிலிருந்து கொள்முதல் செய்ய நினைத்தார். ஆனால் இவர் கிறிஸ்தவர், இந்து கோவிலுக்கு வரி கொடுப்பதில்லை என்பதினால் பெரிய ஊர்களுக்குச் செல்லும் ஜீப்களில் இவருடைய பொருட்களை ஏற்ற மறுத்தனர். இருசக்கர வாகனத்தில் இவ்வளவு தொலைவு சென்று பொருட்கள் வாங்கிவருவது இயலாத காரியம். இந்நிலையில் தினமும் ஊக்கமாக ஜெபிக்க ஆரம்பித்தார். ஜெபத்தைக் கேட்ட தேவன் வங்கி மூலம் சொந்தமாக ஒரு ஜீப் வாங்க உதவி செய்தார். தற்போது இவருடைய வாகனம் தனது கடைக்கு பொருட்கள் ஏற்றி வருவது மட்டுமன்றி மக்களை ஏற்றிச் செல்லவும் பயன்படுகிறது. பிறர் முன் அவருடைய முகத்தை வெட்கப்படாமல் பிரகாசிக்கச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. குண சந்திர பயக், திரு. ஜாண்சன் V.

ரிமுலி: சங்கர் பி. & ஜெலின்

துதிக்க: மங்களூ முண்டா மற்றும் ஜெகன்முண்டா ஆகியோர் தங்களது சபையினை நடத்துவது மட்டுமின்றி பக்கத்து கிராமங்களுக்கும் சென்று ஜெபக்கூட்டங்கள் நடத்தி வருகின்றனர். 15 யானைகளுடன் ஊருக்குள் நுழைய முயன்ற யானைக்கூட்டம் விசுவாசிகள் கூடி ஜெபித்ததினால் மீண்டும் காட்டிற்குள் ஓடிவிட்டது. கொங்கனா மற்றும் ஜமுதி சபைகளுக்கு புதிய ஆட்கள் ஜெபத்திற்கு வருகின்றனர். அர்சலா கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கொடுத்துள்ள விசுவாசி தன் நீண்ட நாள் சுகவீனத்திலிருந்து சுக மடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பின்தொடர் பணி மூலம் 23 கிராமங்களில் வீடுவீடாக கொடுக்கப்பட்டுள்ள சுவிசேஷ கைப்பிரதிகளை மக்கள் வாசித்து கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள, பெண்களைப்போல ஆண்களும் அநேகர் ஆலய ஆராதனைகளில் கலந்துகொள்ள, சபை மூப்பர்கள் புத்ராம் முண்டா, மான்சிங் முண்டா மற்றும் நிரண் முண்டா ஆகியோர் தேவ ஆவியினால் நிரப்பப்பட்டு சபையினை வழி நடத்த; திட்டமிடப்பட்டிருக்கிற நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

குஜராத்

ராண்தா விடுதி: மர்குஸ் மால்தோ & சாரா; சந்திரிகாபேன், மனிஷா லக்ரா, ஏஞ்சல் ராஜ்

துதிக்க: யாத்திராகமம் புத்தகத்தில் வைக்கப் பட்ட தேர்விலும், நமது நாட்காட்டியிலுள்ள வசனங்களை மனப்பாடமாக ஒப்புவிப் பதிலும் மாணவர்கள் சிறந்து விளங்கினர். கிறிஸ்துமஸ் கீத ஆராதனையில் மாணவர் களின் தனித்திறமையினை பெற்றோருடன் ஊர் மக்களும் கண்டு களித்தனர். கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களுக்கு தனியாக சிறப்பு பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் யாவரும் சிறப்பான முறையில் தங்கள் தேர்வுகளுக்கு தயாராகி எழுத; குளிர் காலத்தில் மாணவர்கள் சுகவீனம் அடையாமல் இருக்க; இந்த வருடம் புதிதாக விடுதியில் சேர்ந்திருக்கும் சிறுவர்கள் வீட்டு நினைவிலிருந்து மீண்டு, படிப்பில் கவனம் செலுத்த; விடுதி காப்பாளர் மற்றும் மிஷனரிகளின் உடல் நலத்திற்காக ஜெபிப்போம்.

போடேலி: ஏசுபாபு & உஷா

துதிக்க: குதான்பூர் மற்றும் கார்நெட் கிராம சபைகளில் அனைத்து விசுவாசிகளும் கலந்து கொண்ட வேதாகம வினா விடை போட்டி நடத்தப்பட்டது. சித்பூர் மற்றும் குதான்பூர் சபைகளில் நடத்தப்பட்ட பெண்களுக்கான சிறப்பு கூடுகைகளில் அநேகம் பேர் கலந்துகொண்டு தேவாசீர் வாதம் பெற்றனர். கார்நெட் கிராம சபையில் வேதாகம விளக்க வகுப்பு தொடங்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தாட்வி இனமக்கள் மத்தியி லிருந்து நமது சபைக்கு புதிதாக வரும் சில குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு அறிக்கையிட; இவர்களைத் தொடர்ந்து தாட்வி இனமக்கள் திரளாக கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; வாக்கல் கிராமத்தில் சபை நடத்த நல்ல இடம் கிடைக்க; கார்நெட் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; பின்தொடர் பணி செய்யப்பட்டுள்ள 3 கிராமங்களில் புதிய ஆத்துமாக்கள் கிடைக்க ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. திலக் S.

சூரத்:

மாதவராய் (ஓய்வு) & ஜெபதங்கம்

துதிக்க: விசுவாசி கவிதாவின் வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் சகோதரி 3 முறை கர்ப்பம் கலைந்ததால் வீட்டில் சாபம் இருக்கிறது என கூறவே அதனை சவாலாக ஏற்று கவிதா ஜெபம் செய்யவே, தற்போது அப்பெண் கர்ப்பமாகியுள்ளார். இருவரும் சேர்ந்து ஜெபம் செய்கின்றனர். சங்கீதாபேன் தீய ஆவியின் பிடியிலிருந்தும், புஷ்பாவின் கணவர் விஷப் பூச்சி கடியின் விஷத்திலிருந்தும், மோகித் வேலை செய்யும்போது 3-வது மாடியிலிருந்து தவறி விழுந்தபோதும் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆலயம் கட்ட நிலம் பார்க்கப் பட்டுள்ள பேஸ்தான் கிராமத்தில் விரைவில் நிலம் வாங்கி ஆலயம் கட்டப் பட; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்த சம்புபாய் பிசாசு பிடித்து மீண்டும் ஆலயம் அழைத்துவரப்பட்டுள்ளார். அவரின் சுகத்திற்காக, கணவர்களால் உபத்திரவப்படும் நிசாபேன் மற்றும் மம்தாபேன் கஷ்டத்திலிருந்து விடுபட மற்றும் அவர்களது கணவர்கள் மனந் திருந்த, அனிதாபேனின் கணவன் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட ஜெபிப்போம்.

சொரம்பா:

புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா

துதிக்க: 12 நபர்கள் கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டு அவரின் சீடர்களாயினர். சோனட்காரா ஆலயக்கட்டுமானப்பணி முடிந்து இறுதியாக ஜன்னல் நிறுவும்போது ஏணி உடைந்து வேலைச் செய்துகொண்டிருந்தவர் கீழே விழுந்தாலும் அதிக அடிபடாவண்ணம் தேவன் பாதுகாத்தார். காஸ்வார், புத்வாடா, சோனட்காரா, சோராம்பா சபைகளில் கிறிஸ்துமஸ் பெருவிழாக்கள் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. ரகிபூரா கிராமத்தில் முதன்முறையாக வெளி மைதானத்தில் சிறப்பாக நடைபெற்ற விழாவில் திரளான மற்ற மதத்தினர் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புத்வாடா ஆலயம் வேற்று மதத்தவரின் இரு கோவில்களுக்கு இடையே அருகாமையில் அமைந் திருப்பதால் ஜெபிப்பதில், துதித்துபாடி போற்றுவதிலுள்ள இடையூறு நீங்க; கிம்டுங்ரா ஆலய விசுவாசிகள் தங்கள் பிள்ளைகளுக்கு விசுவாச பிள்ளைகளை மணம் முடிக்கவும், ஆலயத்தில் நிலவும் ஆவிக்குரிய சோர்வு நீங்கவும், ரசிபூரா கிராமத்தில் சிறுவர் ஊழியத்தில் உதவியாக இருக்கும் வாலிப பெண் விஸ்வா இரத்த அணுக்கள் குறைபாட்டிலிருந்து சுக மடைய ஜெபிப்போம்.



அஹ்வா:

விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

துதிக்க: 17 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் தங்களை இணைத்துக் கொண்டனர். அனைத்து கிராம சபைகளிலும் கிறிஸ்துமஸ் கீத பவனி கடுங்குளிர் மத்தியில் காடுகளின் ஊடே அநேக விசுவாசிகள் பங்கு பெற சிறப்பாக நடைபெற்றது. தேவன் தந்த ஆசீர்வாதத்திற்கு நன்றி சொல்லும் வண்ணம் அறுப்பின் பண்டிகை அனைத்து சபைகளிலும் உற்சாகமாக நடைபெற்றது. கிறிஸ்துமஸ் விழாக்களின் போது கிராம தலைவர்கள், வன சரக அலுவலர்கள் ஒத்துழைப்பு தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆம்தவா கிராமத்தின் சத்திபாய் மற்றும் குலாப்பாய் ஊழியத்திற்கு தெரிவிக்கும் எதிர்ப்பினைக் கைவிட்டு கிறிஸ்துவின் சீஷர்களாக மாற; குழந்தை பாக்கியத்திற்காக ஜெபம் செய்துவரும் மீராபேன்; மீனாபேன் மற்றும் சுரேகாபேனின் ஜெபங்கள் கேட்கப்பட; ஊர் ஊராக சுற்றித் திரியும் போலி சாமியார்களை மக்கள் இனங்கண்டுகொள்ள; கிறிஸ்தவத்தின் கள்ள போதகர்களை விசுவாசிகள் இனங்கண்டு அவர்களுக்கு செவிகொடாதிருக்க; பணித்தளத்தில் இந்த வருடம் புதிய ஆலயங்கள் கட்டப்பட்டு, திரளான ஆத்துமாக்கள் ஆதாயம் செய்யப்பட, நமது சுதேச ஊழியர்களையும் மூப்பர்களையும் தேவன் பயன்படுத்த ஜெபிப்போம்.

மோஸ்தா:

பால்ராஜ் & கோயில்புஷ்பம்

துதிக்க: தான்டியாவாடி, தப்கா மற்றும் நிவேல்டா கிராமங்களில் நடந்த கிறிஸ்துமஸ் விழாக்களில் சுமார் 2000 பேர் கூடி தேவனுடைய செய்தியினைக் கேட்டனர். கிறிஸ்துமஸ் கீத பவனியின் போது டேடியாபாடா பேரூராட்சியில் 25 விசுவாசியல்லாத குடும்பங்களை சந்தித்து வாழ்த்து சொல்ல தேவன் கிருபை செய்தார். அதில் நான்கு குடும்பங்கள் ஆராதனைக்குப் புதிதாக வர ஆரம்பித்துள்ளனர். விசுவாசி சுனிலால்பாய்க்கு நடந்த கார் விபத்திலிருந்து அவர் காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ரால்தா கிராமத்தில் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள 3 விதவைகளுக்காக; பிறந்ததிலிருந்து கண்பார்வையின்றி இருக்கிற 2 வயது சிரயானுக்காக; பேசான் கிராமத்தில் நாம் துவங்கவிருக்கிற இரவுக் கூட்டம் நல்ல பலனைத் தரவும், இங்கு ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்படவும், சபையின் வாலிபர்கள் கிரமமாக ஆலய ஆராதனைக்கு வந்து சாட்சியுள்ள வாழ்வு வாழவும் ஜெபிப்போம்.

மாயமாப்போன புற்றுநோய் கட்டி

மகாராஷ்டிரா மாநிலம் துலே மாவட்டத்திலுள்ள நமது பணித்தளம் சோப்டா. இங்கு அமோல் கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி கிருஷ்ணா சுகவீனத்தினால் பாதிக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில், மருத்துவர்களால் பரிசோதனைகள் செய்யப்பட்டு அவருக்கு நுரையீரல் புற்றுநோய் என்று மருத்துவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அதற்குரிய சிகிச்சைகள் எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. ஆனால் கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு அவர் உன்னை ஆதரிப்பார் என்ற வாக்குத்தத்தத்தைப் பிடித்துக்கொண்டு ஊர் திரும்பிய கிருஷ்ணா ஜெபிக்க ஆரம்பித்தார். அவருடன் அவர் குடும்பத்தாரும் சபையின் மற்ற விசுவாசிகளும் விடாப்பிடியாக ஜெபிக்கவே தேவன் ஓர் அற்புதம் செய்தார். அடுத்த முறை கிருஷ்ணா மருத்துவமனைக்குச் சென்று பரிசோதனை செய்த வேளையில் அந்தப் புற்றுநோய் விரைவில் சுகமாகக் கூடிய ஒருசாதாரண கட்டியாக மாறியிருந்தது. அவருக்குத் தேவன் செய்த மகத்துவமான காரியத்தை ஊரில் கூறி தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார். அல்லேலூயா.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜசக் ராஜா D.
திரு. செந்தில் குமார் தீமோத்தேயு
திருமதி. அனிதா பிரபா ஆனந்தகுமார்
திருமதி. ஈமண்டி அனுராதா பங்காரு

உமர்காம்:

ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

துதிக்க: 5 நபர்கள் கர்த்தர் மீதுள்ள தங்களுடைய விசுவாசத்தை வெளிப் படையாக அறிக்கை செய்தனர். நவநகோரி மற்றும் ஜெரோலி கிராமங்களில் வருட இறுதி துதி ஆராதனை அநேகர் கலந்துகொள்ள சிறப்பாக நடைபெற்றது. மான்டா மற்றும் நிக்கோலி கிராமங்களில் நடைபெற்ற உபவாச ஜெபக்கூட்டங்களில் திரளானோர் பங்கு பெற்று சக இனமக்களின் இரட்சிப்புக்காக ஜெபித்தனர். ஆலய மூப்பர்கள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: போர்மால் மற்றும் தோகிர்பாடா கிராமங்களில் இரவுக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட; இயேசுத்திரைப்படம், வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள் மூலம் புதிய கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்ற, இந்த புது வருடம் எடுக்கப்படுக்கின்ற முயற்சிகள் நல்ல பலனைக்கொடுக்க; சுதேச ஊழியர்கள் மற்றும் சபை மூப்பர்கள் தேவ ஆவியினால் நடத்தப்பட்டு திரளான ஆத்துமாக்களை சபைக்கு கொண்டு வர ஜெபிப்போம்.

மகாராஷ்டிரா

சாவ்தா:

வசாவா ரமேஷ்பாய் & சுனிதாபேன்

துதிக்க: 10 பேர் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். வகாரியாவின் மருமகள் துணிக்குள் மறைந்திருந்த விஷப் பாம்பு கண்டு பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டது. கிறிஸ்துமஸ் கீத ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. 2 கிராமங்களில் கிறிஸ்துமஸ் கீத பவனியின் போது நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. சிறு ஜெபக்குழு நடத்துபவர் பயிற்சி கொடுக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கௌல்சிங் மனந்திரும்ப; சகோதரிகள் ஹியாயரிபாய் மற்றும் லட்கிபாய் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; ஜவான்சிங் மற்றும் ஆகாஷ் காசநோயின் தாக்கத்தி லிருந்து குணமடைய; சுனில்-சியானிபாய் தம்பதிக்கு கர்த்தர் குழந்தை பாக்கியம் அருள; திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

சோப்டா:

வசாவா பாங்சிங் மௌலியா & ஏமன்பேன்

துதிக்க: ஐந்து நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள்ளாக தங்களை இணைத்துக் கொண்டனர். சோப்டா கிராமத்தில் எதிர்ப்புகள் நிலவி வந்த சூழ்நிலையில் கிறிஸ்துமஸ் விழா மற்றும் ஆராதனை சிறப்பாக நடத்த தேவன் உதவி செய்தார். நமது விடுதி மாணவர்கள் அர்பன் ஐம்மு மற்றும் ஆகாஷ் பர்சியா விளையாட்டுகளில் மாவட்ட அளவில் சிறந்து விளங்குகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அமோல் கிராமத்தின் கிருஷ்ணா வின் வயிற்றில் காணப்படும் கட்டி கரைந்துபோக; கடந்த 9 வருடங்களாக படுத்தப்படுக்கையாக இருந்த நாக்பூர் கிராமத்தின் ரமேஷ்பாய் சுகம் பெற; மாணவர்களுக்கு சிறப்பு வகுப்புகள் நடத்த டியூசன் ஆசிரியர்கள் கிடைக்க; மாணவர்கள் படிப்பிலும் கிறிஸ்துவுடனான ஐக்கியத்திலும் சிறந்து விளங்க ஜெபிப்போம்.



தலாசரி:

மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

துதிக்க: 17 நபர்கள் கிறிஸ்துவின் மீதான தங்களது விசுவாசத்தை அறிக்கையிட்டு அவரின் மந்தையில் இணைந்தனர். உத்வா கிராமத்தில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் பெருவிழாவில் சுமார் 2000 பேர் கூடி நின்று நிகழ்ச்சிகளைக் கண்டு நற்செய்தியினை கேட்டுச் சென்றனர். நம்முடைய ஜக்கியத்திலிருந்து சென்ற கோடாடா கிராமத்தினர் மறுபடியும் கிறிஸ்துவுக்குள் தங்களைப் புதுப்பித்துக்கொண்டனர். கிறிஸ்துமஸ் கீத பவனியாக இங்குள்ள 36 குடும்பத்தினரையும் சந்திக்க தேவன் கிருபை செய்தார். மேலும் மற்றும் பர்டா கிராமங்களில் 5 குடும்பங்கள் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சைவான் கிராமத்தில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; கோசம்பாட் கிராமத்தில் ஆராதனை குழு ஆரம்பிக்கப்பட; கட்கோனய் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆராதனையை நிறுத்த எதிர்ப்பாளர்கள் எடுக்கும் முயற்சிகள் முறியடிக்கப்பட; கன்சாட் கிராமத்தின் 7 வயது சிறுவன் ஆரியன் செயல் திறன் குறைபாட்டிலிருந்து சுகமடைய ஜெபிப்போம்.

ஜவஹர்:

ஸ்ரீனிவாச ராவ் & ராஜ்யலட்சுமி

துதிக்க: கிறிஸ்துமஸ் கால விழா சின்தோனி மற்றும் லக்கவருமால் கிராமங்களில் சுமார் 1200 நபர்கள் கூடியிருக்க சிறப்பாக நடைபெற்றது. கிறிஸ்துமஸ் கீத பவனியின் போது மாந்தோனி, சிஸ்தா, கேட்பா, மாட்வீரா கிராமங்களில் தெருபிரசங்கம் மூலம் அனைவருக்கும் இரவிலே நற்செய்தி அறிவிக்கப்பட்டது. பெண்கள் சிறப்பு கூடுகைகள் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அதிக எதிர்ப்புகளை சந்தித்து வரும் டாபரி கிராம விசுவாசிகள் திடமாக நிற்கவும் எதிர்ப்பாளர்கள் கிறிஸ்துவால் சந்திக்கப்படவும், கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருக்கும் புது விசுவாசிகள் தங்கள் பயங்களை புறந்தள்ளி சபையில் இணையவும், காணப்படும் தடைகள் யாவும் நீங்கவும், விக்ரமால் கிராமத்தின் சகோதரி மணிஷா பிசாசின் பிடியிலிருந்து விடுபடவும் ஜெபிப்போம்.

மொல்கி: பரணிதரன் & செல்வராணி; சீனு; பிட்யூத் குமார் சிங்; நர்சிங் & விமலா

துதிக்க: 9 நபர்கள் கிறிஸ்துவின் அன்பினை ருசித்து அவரை தங்கள் இரட்சகராக வெளிப்படையாக அறிக்கைச் செய்தனர். 6 இடங்களில் கிறிஸ்மஸ் கால நிகழ்ச்சிகள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. புது வருட வாக்குத்தத்தக் கூட்டமாக உபவாச கூட்டங்கள் 2 இடங்களில் திரளான விசுவாசிகள் கூடி நடத்தப்பட்டன. 5 இடங்களில் பெண்களுக்கான சிறப்பு கூடுகைகள் நடத்தப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய மிஷனரி பயிற்சியாளர்கள் சீனு மற்றும் பிட்யூத் குமார் சிங்கிற்கு தேவன் மொழி ஞானம் அருளவும், தேவனுடைய கரத்தில் நல்ல கருவிகளாக பயன்படுத்தப்படவும், வேலைக்காக பிற இடங்களுக்குச் சென்றுள்ள விசுவாசிகள் விசுவாசத்தைக் காத்து சாட்சியுள்ள வாழ்க்கை வாழ; நஜுக்காபாய் மற்றும் லத்தாபாய் விசுவாசத்திற்குள் மீண்டும் வர; திட்டமிடப்பட்டிருக்கிற நிகழ்சிகள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஏஞ்சல் ஜெபா ஹென்றி
திருமதி. சுப்ரா பாக் மிண்டு குட்டும்
திருமதி. சாரதி அருண்குமார்
திருமதி. சுமதி கணேஷ்
திருமதி. நீத்து தினேஷ் குமார்
திரு. ஸ்டீபன் ஹன்ஸ்தா

கர்நாடகா

ஹலியால்:

தாங்லால் ஸௌ & நெம்ஸாவா

துதிக்க: கெர்பாடா, டெட்காரா மற்றும் மைநாலி கிராமங்களில் புதிதாக ஆராதனை குழுக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. 12 மணி நேர உபவாச ஜெபத்திலே அநேகர் பங்கு பெற்று உற்சாகமாக சொந்த ஜனத்தின் மீட்புக் காக ஜெபித்தனர். தீவிர குடிகாரர்களாக இருந்த நாகேஷ் மற்றும் சித்திப்பாக ஜெபத்தின் மூலம் குடியிலிருந்து விடுபட்டு கிரமமாக ஆலயம் வருகின்றனர். தீவிர ஒற்றை தலைவலியினால் கஷ்டப்பட்டு கொண்டிருந்த நாகராஜ் ஜெபத்தினால் குணமடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: காவல் ஆய்வாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மிஷனரியின் சகோதரர் லியான்மின்லுங் பயிற்சி முடித்து பணியில் சேரவும், மற்று மொரு சகோதரர் பால்லுன்மாங்சௌ பாரத ஸ்டேட் வங்கியில் நேர்முகதேர்வு நல்லபடியாக பண்ணவும், உள்ளங்கால் மறத்துப்போன நிலையில் வேலை செய்ய கடினமாக உணரும் காக்ரி கிராமத்தின் சுபாஷ் குணமடைய; ஹோசா கரஹல்லி மற்றும் காலஹட்டி கிராமங்களில் நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மஞ்சு மற்றும் ஹரீஸ் மனந்திரும்ப ஜெபிப்போம்.

ஷிக்காவ்:

சுனில் குமார் & தேகம் சங்கீதா லாலு

துதிக்க: மூன்று நபர்கள் கிறிஸ்துவை அறிக்கையிட்டு அவரின் ஐக்கியத்துக்குள் வந்துள்ளனர். குடித்து சிறுநீரகம் கெட்டுப்போய் சாகும் நிலையில் ஆலயம் வந்த 21 வயது கிரண் என்ற வாலிபனை தொடர் ஜெபத்தின் மூலம் கிறிஸ்து சுக மாக்கிகொண்டு வருகிறார். கிறிஸ்துமஸ் விழாக்கள் மற்றும் ஆராதனைகள் நடைபெற்ற இடங்களில் பாதுகாப்புடன் சிறப்பாக நடந்திட தேவன் கிருபை செய்தார். படித்து முடித்து வேலைக்கு காத்துக்கொண்டிருந்த அஸ்வினிக்காக ஜெபித்தபோது ஒரு பள்ளியில் நல்ல வேலையை தேவன் கட்டளையிட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஐடிஐ முடித்து வேலைக்கு காத்துக்கொண்டிருக்கும் வாலிபன் பிரதீப் புக்கு நல்ல வேலை கிடைக்க; புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ள பீபிஜான் சகோதரியின் கை விரல்களிலுள்ள பிரச்சினை நீங்க; 20 வயது மகேஷ் அதி தீவிர சர்க்கரை நோயின் பாதிப்பிலிருந்து குணமடைய; வியாபாரத்தில் மிகுந்த நஷ்டமடைந்து குடும்பத்தில் சமாதானம் இழந்து தற்போது ஆலயம் வந்து ஜெபிக்கும் ஒரு இஸ்லாமிய குடும்பத் திற்காக; வாகன விபத்தில் அகப்பட்டு கால் முட்டு உடைந்திருக்கும் சாந்தா விரைவில் குணமடைய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சுரேஷ் ஜோசப்

நிடகுந்தி: சாமுவேல் பெபர்தா

துதிக்க: கிறிஸ்துமஸ் பெருவிழா ஆராதனையின் போது 1650 சுவிசேஷப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. சுமார் 950 பேருக்கு நற்செய்தி பகிரப்பட்டது. தீவிர காச நோயின் தாக்கத்திலிருந்து ஜெபத்தின் மூலம் ரேஷ்மா சகோதரி விடுதலை பெற்று வருகிறார். விபத்தில் சிக்கி சுயநினைவை இழந்த அசோக் கௌடா சபை மக்களின் ஊக்கமான ஜெபத்தினால் ஒரு வாரம் கழித்து மீண்டும் கண்விழித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சில்பா, உஷா, சக்குபாய் மற்றும் சிவலிலா சகோதரிகளுக்கு நல்ல வாழ்க்கைத் துணைகள் கிடைக்க, உப்பலாடினி கிராமத்தில் எதிர்ப்பு தெரிவிக்கும் லிம்பாஜி, பரசு, உச்சியா, இன்கப்பா, புனித், ராஜு, சுரேஷ் மற்றும் பிரகாஷ் மனந்திரும்ப; அதீத கடனில் சிக்கி தவிக்கும் ராஜு-ஜோதி, சுனில்-நீலா, சந்தோஷ் - கவிதா, சோமு - ஜெயா குடும்பங்கள் அதிலிருந்து மீள ஜெபிப்போம்.

கௌரிபித்தனூர்: ஃப்ரான்சிஸ் துரைசாமி கே.& ஜெயந்தி பி.

துதிக்க: விசுவாசியான வயதான முதாட்டி ஆதிலக்ஷ்மியம்மா தன் உறவினர்களால் சொத்து அபகரிக்கப்பட்டு கைவிடப்பட்ட நிலையில் ஆலயம் வந்து ஜெபித்ததினால் மீண்டும் அவரை கவணிக்கும் பொறுப்பை உறவினர்கள் ஏற்றுக்கொண்டனர். திடீரென வேலையில் இருந்து நீக்கப்பட்ட சந்திரகலா அவருடைய ஜெபத்தின் மூலம் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். கிறிஸ்துமஸ் கால நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அநேக புற மதத்தினருக்கு சுவிசேஷம் கூற நல்ல வாய்ப்புகளை தேவன் ஏற்படுத்தி கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ராபர்ட்-கிருபா தம்பதிகளுக்கிடையே சண்டை விலகி சமாதானம் நிலவ; லஷ்மிதேவியம்மாவின் நிலத்தை அபகரிக்க நினைக்கும் உறவினர்களின் முயற்சிகள் கைகூடாமல் போக, நவீன், சூர்யா, நந்தினி, கோவர்தன் மற்றும் பிரகாஷ் இன்னும் விசுவாசத்தில் உறுதியாகி அதனை அறிக்கையிட; அடிக்கடி சுகவீனமாகி தன் குடும்பத்தின் தேவைகளை சந்திக்க சிரமப்படும் நரேந்திரா சுகமடைய; பிரசாத் மற்றும் திம்மப்பா குடும்பங்கள் மீண்டும் கர்த்தரோடுள்ள உறவை புதுப்பித்துக்கொள்ள ஜெபிப்போம்.

அறியாமை இருள் விலகட்டும்

ஹிமாச்சலப்பிரதேசம் தானேதார் பணித்தளத்தில் ஊழியம் செய்துவரும் நமது மிஷனரி ஜெபர்சன் தம்பதியினர் ஒருநாள் ராம்பூர் என்கிற ஊருக்கு பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்தனர். மலை முகடுகள், பள்ளத்தாக்குகள் என்று பேருந்து ஆபத்தான சாலையில் விரைந்துகொண்டிருந்தது. திடீரென 50 வயது மதிக்கத்தக்க ஓர் ஆண் பயணி மார்பைப் பிடித்துக்கொண்டு பேருந்தின் இருக்கையிலே வலியினால் துடித்தார். பிறகு மயக்கமாகி மூச்சுப் பேச்சின்றி சாய்ந்து விட்டார். இது மாரடைப்பின் அறிகுறி என்று தெரிந்தும் அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை. அவருடைய மார்பை அமுக்கிவிட்டுச் செயற்கை சுவாசம் கொடுக்கலாம் என்று நினைத்து நமது மிஷனரி அவர் அருகில் சென்றபோது இது பிசாசின் வேலை நாம் அருகில் சென்றால் நம்மைப் பிடித்துவிடும் என்று சொல்லி அவரைப் பிறர் தடுத்துவிட்டனர். உடனே ஓட்டுநரிடம் சென்று அருகில் உள்ள மருத்துவமனைக்கு விரைவாகச் செல்லும்படி நமது மிஷனரி கேட்கவே, பேருந்து விரைவாகச் சென்று 10 நிமிடங்களுக்குப்பின் மருத்துவமனையில் நின்றது. பரிசோதித்த மருத்துவர்கள் பயணி உயிரிழந்துவிட்டதாக அறிவித்தனர். மக்களின் அறியாமை இருள் நீங்க ஜெபியுங்கள்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. நியாங் கான் மன் உம் பியாக் லால்
திருமதி. அனிதா ஷிஷுபால்

கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

துதிக்க: சபை மூப்பர்களான பசப்பா மற்றும் எல்லப்பா ஆகியோர் எல்லா எதிர்ப்பு களையும் சமாளித்து கிறிஸ்துமஸ் பெருவிழாவை எந்தவொரு தடையுமின்றி சிறப்பாக நடைபெற காரியங்களை நடப் பித்தனர். 3 நபர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். விசுவாசி சின்னம்மா முன்பு ஆலயத்திற்கு 70 நாற்காலிகள் வாங்கிக்கொடுத்த நிலையில் தற்போது ஒரு பெரிய அலமாரி வாங்கிக்கொடுத்து தேவனுக்கு நன்றி செலுத்தினதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குல்பர்கா மாவட்டத்திலிருந்து கானாபூர் வந்து பானிபூரி கடை வைத்து தன் குடும்பத்தினரைக் காப்பாற்றும் விசுவாசி சரிதாவின் வியாபாரம் மற்றும் உடல் நிலைக்காக; கைப்பேசியில் வருகின்ற தவறான போதனைகளில் விசுவாசிகள் சிக்கிக்கொள்ளாதபடி இருக்க; விசுவாசியின் மகன் பிரமோத் தன் பொறியியல் படிப்பை ஹுப்ளி நகரில் நல்ல முறையில் நிறைவு செய்து நல்ல வேலையில் அமர; மிஷனரியின் மகள் எழுதியுள்ள NET தேர்வில் வெற்றி பெற்று உதவி பேராசிரியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட ஜெபிப்போம்.

ஆந்திரப் பிரதேசம்

சித்தூர் பிராந்தியம்:
வேடியப்பன் & லட்சுமி

துதிக்க: சுதேச ஊழியர்களின் குடும்பக் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. மீண்டுமாக தங்கள் ஊழியர்கள் அர்ப்பணிப்பை உறுதி படுத்திக் கொண்டனர். ராமாபுரம் கிராமத்தின் அருகிலுள்ள மலையில் உபவாச ஜெபம் நடத்தப்பட்டது. அநேகர் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். பைரேட்டிப்பள்ளி கிராமத்தில் பெண்கள் சிறப்பு கூடுகை நடைபெற்றது. கூலூர்பேட் மற்றும் மதனபள்ளி பகுதிகளில் சுவிசேஷ ரதத்தின் மூலம் நற்செய்தி பகிரும் நிகழ்ச்சிகள் நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பைரேட்டிப்பள்ளியிலுள்ள தலைமைத்துவ பயிற்சி நிலையத்திற்கு நிலம் கொடுத்தவர் இன்னும் நிலத்தை காலி செய்யவில்லை. விரைவில் நிலம் காலி செய்யப்பட்டு நம் கட்டுப்பாட்டுக்குள் வர; குப்பம் சுதேச ஊழியர் நம்பீசனின் மனைவி சாந்தி பிரியாவுக்கு ஏற்பட்டுள்ள இருதய நோயிலிருந்து அவர் பூரண குணமடைய; கிறிஸ்துமஸ் கீத ஆராதனை நிகழ்ச்சிகளில் தேவ வசனத்தை கேட்டவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

முள்ளில் உதைப்பது கடினமாம்

கர்நாடகா மாநிலம் ஹுப்ளி மாவட்டத்தின் உப்லாபானி கிராமத்தில் கிறிஸ்துமஸ் விழாக்கள் நடத்தக் கூடாது என்று முன்னரே அறிவித்துவிட்ட நிலையில் நமது விசுவாசிகள் உபவாசமிருந்து ஜெபித்து வந்தனர். கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற விசுவாசத்துடன் ஆலயம் முன்புள்ள மைதானத்தில் அலங்காரங்கள் செய்து கிறிஸ்துமஸ் விழாவினைத் தொடங்கினர். பக்கத்துச் சபைகளிலிருந்து விசுவாசிகள் வந்திருந்த நிலையில் கிராமத்திலிருந்தும் பிற வாலிபர்கள், பெரியவர்கள் மற்றும் சிறுவர்கள் கூடியிருந்தனர். விழா தொடங்கிய சிறிது நேரத்தில் ஊர் கோவிலின் ஒலிபெருக்கி மூலம், கிறிஸ்துமஸ் விழாவினை உடனே நிறுத்தமாறும் அனைத்துக் கிறிஸ்தவர்களும் ஊர் கோயில் முன் கூடுமாறும் ஊர் தலைவர் எச்சரித்தார். ஆனால் நமது விசுவாசிகள் ஜெபத்துடன் தொடர்ந்து நிகழ்ச்சியினை நடத்தினர். விழா நல்லபடியாக நடந்து முடிந்தது. மறுநாள் ஊர் தலைவரின் மனைவி பிசாசு பிடித்து ஆடத்தொடங்கினார். பிற்பாடு அவர் மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்லப்பட்டுள்ளார். ஊர்மக்களுக்கு பயம் வந்து தற்போது எதிர்ப்புக் காட்டாமல் அமைதியாக இருக்கின்றனர்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. வினு P., திரு. சாமுவேல் J.
திருமதி. ஜின் லெட்தென்மாங் ஹாவ்கிப்

பலமநேர்:

பால் குப்புசாமி & ஷைலா

துதிக்க: 25 கிராமங்களில் கிறிஸ்துமஸ் கீத பவனிகள் எந்தவொரு இடையூறுமின்றி சிறப்பாக நடைபெற்றன. மிட்டூர் கிராமத்தில் இயேசு படம் திரையிட தேவன் உதவி செய்தார், அங்கு வந்திருந்தவர்களுக்கு கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. நடத்தப்பட்ட புதுவருட வாக்குத்தத்த ஆராதனையில் அனைத்து விசுவாசி களும் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்று சென்றனர். ஆலய நிர்வாகக் கூட்டம் சிறப்பான முறையில் அனைத்து ஆலயங்களுக்கும் சேர்த்து நடத்தப்பட்ட தற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: செல்லவரப்பள்ளி ஆராதனைக் குழு சிறப்பாக செயல்பட; இங்கு ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; பலமநேர் நகரத்தில் தங்களது உணவு விடுதியினை திறந் துள்ள நமது விசுவாசியின் தொழில் ஆசீர்வதிக்கப்பட; 10 விசுவாசிகளைக் கொண்டுள்ள கண்ட்ரிகா கிராமத்தில் ஆராதனைக்குழு தொடங்கப்பட; வினோத் மனநோயிலிருந்தும், வெங்கட்ராமண் காசநோயின் தாக்கத்திலிருந்தும், ஆபிரகாம் ஆஸ்துமாவிலிருந்தும், பிரசாந்த் நுரையீரல் நோய்தொற்றிலிருந்தும் குண மடைய ஜெபிப்போம்.

தமிழ்நாடு

மிச்சேரி:

தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி

துதிக்க: அனைத்து சபைகளிலும் கிறிஸ்துமஸ் கீத பவனி மற்றும் ஆராதனைகள் சிறப்பாக நடத்திட தேவன் கிருபை செய்தார். திருமணமாகி பத்து வருடங்களாகியும் குழந்தையின்றி இருந்த சூசை-மேரி தம்பதிக்கும், நித்தின்-நான்சி தம்பதிக்கும் அழகான குழந்தைகளை தந்து தேவன் ஆசீர்வதித்துள்ளார். அநேக நாட்களாக சரீர பெலவீனத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த மோகனின் ஜெபத்தை கேட்டு தேவன் அவரைக் குண மாக்கினதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தன்னுடைய அதீத உதிரப்போக்கு நிற்க ஆலயம் வந்து ஜெபிக்கும் பத்மா வதியை தேவன் குணமாக்க; ராஜேஸ்வரி ஜெபத்திற்கு வரத் தடையாக இருக்கும் கணவர் ரமேஷ் மனந்திரும்பி அவரும் உடன் வர; குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்துக்கொண்டிருக்கும் நித்யா-சதீஷ், கௌசல்யா- தீபக்ராஜ் குடும்பங்கள் குழந்தைகளினால் ஆசீர்வதிக்கப்பட ஜெபிப்போம்.

அஞ்செட்டி:

டேவிட் நிக்கல்சன் & ஜவி

துதிக்க: ஏழு கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டு 15 நபர்கள் புதிய தொடர்புக்குள் வந்துள்ளனர். கிறிஸ்துமஸ் கால விழாக்கள் எல்லா இடங்களிலும் சிறப்பாக நடைபெற தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய தொடர்பாளர்களான மனசா, பாவனா, மஞ்சு, லக்சுமி, அட்கிபதி, சண்முகம், பிரேமா, ராஜ்குமார், மசானமுத்து, பாண்டியன், சேகர், சந்திரன் குடும்பங்கள் தேவனை இன்னும் அறிந்துகொண்டு அவரின் மந்தைக்குள் வர; விசுவாசி லக்சுமி தன்னுடைய பேச்சுத் திறனை மீண்டும் பெற ஜெபிப்போம்.



தேன்கனிக்கோட்டை:

ஜெபராஜ் & எஸ்தர் தங்கம்

துதிக்க: பெங்களூரிலிருந்து வந்திருந்த நமது இயக்கத்தின் ஆதரவாளர் திரு. டேவிட் பாஸ்கர் அவர்தம் குழுவினரோடு சீக்கேபுரம் மற்றும் காரண்டபள்ளி கிராமங்களில் கிறிஸ்துமஸ் பெருவிழாக்களை சிறப்பாக பரிசுகள் வழங்கிக்கொண்டாட தேவன் கிருபை செய்தார். மிஷனரி தன் மனைவியுடன் ஊழியத்திற்கு இரு சக்கர வாகனத்தில் மாலை நேரத்தில் காட்டு வழியில் சென்றுகொண்டிருந்தபோது இருபது அடி தூரத்தில் குறுக்கே கடந்து சென்ற யானையிடமிருந்து தேவன் அற்புதமாக பாதுகாத்தார். மரக்கட்டா கிராமத்திலுள்ள இரட்சிக்கப்படாத இருபது குடும்பங்களை சந்தித்து கிறிஸ்துமஸ் கால செய்தியினை பகிர்ந்து கொள்ளவும் பரிசுகள் கொடுத்து ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இந்த புதிய வருடம் மரகட்டா பஞ்சாயத்தைச் சேர்ந்த 7 கிராமங்களை மையமாக வைத்து ஊழியம் செய்து திருச்சபைகளை நிறுவ உள்ள திட்டம் தேவ தயவால் நிறைவேற; மரகட்டா கிராமத்தில் கிறிஸ்தவர்களுக்கு கல்லறை நிலம் ஒதுக்குவதில் பிரச்சினை செய்யும் நாகப்பா மனம் மாற; விசுவாசி சுந்தர் செங்கல்பட்டிலிருந்து கிருஷ்ணகிரிக்கு வேலை மாறுதல் பெற; ராஜ்குமாருக்கு நல்ல வேலை கிடைக்க; பால் லக்சுமணன் கண்ணில் ஏற்பட்ட புண் குணமடைய ஜெபிப்போம்.

மக்களுக்கு கிடைத்த கிறிஸ்துமஸ் பரிசு

உனக்கு அருகாமையிலுள்ள மூன்று நகரங்களை நற்செய்தியினால் நிரப்பு என்று ஆண்டவர் பல நாட்களாக என் உள்ளத்திலே தெளிவாக பேசிக்கொண்டே இருந்தார். இதற்கு நான் கீழ்படிந்து இந்த கிறிஸ்துமஸ் நாட்களையொட்டி மூன்று நகரங்களில் 'மோல் அன்மோல்' என்ற தலைப்புடைய நற்செய்தி நூலை மக்களுக்குக் கொடுத்தோம். இது ஹிந்தி மொழியில் 14 பக்கம் கொண்ட நூலாகும். மூன்று நகரங்களில் அந்தந்த பகுதியின் SDO (Sub divisional officer)-வின் அனுமதி பெற்று இதைச் செய்தோம். சற்று பயமாக இருந்தபொழுதிலும் எரே: 20:11-ஐ எனக்கு வாக்குத்தத்தமாக ஆண்டவர் கொடுத்தார். மொத்தம் 21055 புத்தகங்களைக் கொடுக்க ஆண்டவர் கிருபைச் செய்தார். இந்த ஊழியத்தை சிறுகுழுவாக அந்தந்த மாவட்டத்தின் நீதிமன்ற வளாகத்தில் வைத்து துவங்கினோம். வழக்கறிஞர்கள் உட்பட தங்கள் வழக்கு தொடர்பாக பல கிராமங்களிலிருந்து வந்திருந்த மக்கள் மகிழ்ச்சியுடன் இந்த புத்தகத்தைப் பெற்றுக்கொண்டதோடு தங்கள் அண்டை வீடுகளில் வசிப்பவர்களுக்காகவும் வாங்கிச் சென்றனர். இந்த புத்தகத்தை ஒருவர் மட்டும் வாங்க தயங்கியபோது அங்கிருந்த வழக்கறிஞர் ஒருவர் அவரிடம் ''இந்த புத்தகத்தை வீட்டிற்குச் சென்று பொறுமையாகப் படித்துப்பார் இதில் உனக்கு ஞானம் கொடுக்கக் கூடிய நல்ல போதனைக் கிடைக்கும்'' என்றார். வரவிருக்கும் நாட்களிலே இவ்விடங்களிலிருந்து அநேகர் ஆண்டவரை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.

– அருட்திரு. ம. ஜான் – மிஷனரி,



திரு. சிவகுமார் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள விருது விளங்கினான் என்ற கிராமத்தில் 26.04.1994-ல் ஓர் இந்து குடும்பத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் திரு. N. சந்திரசேகரன் & திருமதி. லதா. இவர்கள் தமது பிள்ளைகளுக்கு இந்து நெறிமுறைகளைப் போதித்து, வைராக்கியம் மிகுந்த இந்து பக்தர்களாக வளர்த்தார்கள். திரு. சிவகுமார் 2011-ம் ஆண்டு தனது கல்லூரி பருவத்தில் EU மாணவர் ஊழியம் நடத்திய சுவிசேஷ முகாமில் கலந்துகொண்டார். அதில் பாவத்தைக் குறித்தும் இரட்சிப்பைக் குறித்தும் கேட்டு, விசுவாசித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராகவும் தனது தெய்வமாகவும் ஏற்றுக்கொண்டு, தன் வாழ்வை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார். கல்லூரி படிப்பை முடித்தப் பின்பு ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்த சமயத்தில் ஆதியாகமம் 12-ம் அதிகாரத்தின் படி ஊழிய அழைப்பைப் பெற்றுத் தனது வேலையை ராஜினாமா செய்தார். அதன் காரணமாக அவரின் பெற்றோர்கள் அவருக்குப் பயங்கரமான எதிர்ப்புகளைத் தெரிவித்தார்கள். சொத்திலிருந்து எந்த ஒரு பங்கும் கொடுக்க மாட்டோம் என்று மிரட்டினார்கள். ஆனால் அவர் "உங்கள் சொத்துகளிலிருந்து எதுவும் எனக்குத் தேவையில்லை, நான் கிறிஸ்து இயேசுவுக்கு ஊழியம் செய்யப் போகிறேன்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார். ஒரு வாரம் அவரோடு பேசாமலிருந்தார்கள். பின்பு அவர் உபவாசம் பண்ணி ஜெபம் செய்த போது தேவன் அவரின் பெற்றோர்களின் இருதயத்தை மாற்றினார். அவர்கள் அவரை அழைத்து ஆசீர்வதித்து ஊழியத்திற்கு அனுப்பினார்கள். அறியப்படாத இனமக்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க தேவன் அழைத்த அழைப்பை நிச்சயித்துக்கொண்டு 2017-ம் ஆண்டு FMPB-ல் மிஷனரியாக இணைந்தார். முறையான பயிற்சிக்குப்பின் ஹரியானாவில் ஒரு வருடமும், உத்தராகண்டில் நான்கு வருடமும் ஊழியம் செய்து வந்தார்.

அஸோம் மாநிலத்தைச் சேர்ந்த கோவாட்டி மாவட்டத்திலுள்ள திரு. சந்தன் மராக் மற்றும் திருமதி. மின்னோத்தி மராக் இவர்களுக்கு 29.07.1996 அன்று மூன்றாவது பிள்ளையாக சகோதரி. சுசிலா மராக் பிறந்தார். இவரின் பெற்றோர்கள் பேப்டிஸ்ட் மிஷன் மூலமாகக் கிறிஸ்து இயேசுவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள். இவர்கள் முதல் தலைமுறை கிறிஸ்தவர்கள். சிறு வயது முதற்கொண்டு சகோதரி. சுசிலா கிறிஸ்தவ நெறிமுறைகளில் வளர்க்கப்பட்டார். வாரந்தோறும் ஞாயிறு ஆராதனையில் கலந்துகொண்டு தேவனை ஆராதித்து வந்தார். 2010-ம் ஆண்டு எட்டாம் வகுப்பு படிக்கும் போது பேப்டிஸ்ட் மிஷன் வாலிபர் முகாமில் கிறிஸ்து இயேசுவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தனது வாழ்க்கையை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்தார். 2018-ம் ஆண்டு FMPB-ல் இணைந்து ஜான்சியிலுள்ள மிஷனரி பயிற்சி மையத்தில் பயிற்சி எடுத்தப்பின் ராஜஸ்தானிலுள்ள சிறுமியர் விடுதியில் ஒரு வருடம் பணிபுரிந்தார். 2020-ம் ஆண்டு தேவனுடைய சித்தத்தின்படி மிஷனரி சிவகுமாருக்கும் மிஷனரி சுசிலாவிற்கும் திருமணம் நடந்தது. 2021-ம் ஆண்டு ஓர் ஆண் குழந்தையை (ஜீவன் சான் சாமுவேல் D.O.B. 02.04.2021) தந்து தேவன் இவர்களை ஆசீர்வதித்துள்ளார். தற்பொழுது குடும்பமாக உத்தராகண்டிலுள்ள தினேஷ்பூர் என்ற பணித்தளத்தில் ஊழியம் செய்து வருகிறார்கள். இந்தக் குடும்பத்தை நமது ஜெபங்களில் நினைவுக் கூருவோம்.



திரு. சிவகுமார் சி. & திருமதி. சுசிலா மராக் குடும்பம்

Regd. Newspaper for India No.17759/69

"நமது ஏக்கமும் பெருமூச்சும்!"

1 எத்தனை நாட்கள் செல்லும்
இயேசுவின் சுவிசேஷம்
அத்தனை நாட்டவரும் அறிய எத்தனை
நாட்கள் செல்லும்?

ஆடுகள் ஏராளம் அலைந்து திரிந்திடுதே
தேடுவோர் யாவருக்கும் என் பெலன் தாராளம்

2 சாத்தானின் சக்திகளும் பெருகிடும் நாட்களிலே
தேவனின் பிள்ளைகட்குள் ஒருமனம் என்று வரும்?

3 தேவைகள் நிறைந்து நிற்க வாய்ப்புகள்
நழுவிச் செல்ல
தாழ்மையாய் ஊழியர்கள் இணைவது
என்று வரும்?

4 கோபங்கள், சீற்றங்களும், பொறாமையும், பிரிவுகளும்
ஊழியர் என்று சொல்வார் நடுவினில் என்றகலும்?

5 உண்மையாம் கோதுமைகள் மணியாக மண் அடியில்
மறைந்திடும் நாள் வருமா?
நாம் உடைபடும் நாள் வருமா?

பாடலை இயற்றியவர்:
டாக்டர். N. எமில் ஜெபசிங்

Published by: S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***